# உதயன்

விலை ரூபா 6.00

சுடர்:16 வள்ளுவர் ஆண்டு 2031 மார்கழி 06 வியாழக்கிழமை (21-12-2000)UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:25


# யுத்தத்தை முடிவுக்குக் கொண்டு வருமாறு உதவி வழங்கும் நாடுகள் கோரிக்கை!

முச்சந்தி முரளி



யார் சொன்னாலும் நில்லாதது இந்த யுத்தம் ஒன்டு தான் போல......!

## இலங்கை அரசாங்கத்துக்கு முதல் தடவையாக அழுத்தம்

பாரிஸ்,டிசெம்பர்21

**இலங்கையில் நீண்டகாலமாகத் தொடரும் யுத்தத்தை முடிவுக்குக் கொண்டு வரவேண்டும் என்று இலங்கைக்கு உதவி வழங்கும் நாடுகளும் அமைப்புக்களும் இலங்கை அரசாங்கத்தைக் கேட்டுள்ளன.**

**பாரிஸில் கடந்த இரு தினங்கள் இடம்பெற்ற உதவி வழங்கும் நாடுகளின் கூட்டத்தின் முடிவிலேயே இந்தக் கோரிக்கை விடப்பட்டது.**

இலங்கைக்கு உதவி வழங்கும் நாடுகளின் கூட்டம் நேற்றுமுன்தினம் முடிவடைந்ததை அடுத்து பாரிஸில் உள்ள உலகவங்கிக் கட்டடத்தில் செய்தியாளர் மாநாடு ஒன்று நடத்தப்பட்டது.

இந்த செய்தியாளர் மாநாட்டில் 24 நாடுகளின் பிரதிநிதிகள், உதவி வழங்கும் சர்வதேச நிறுவனங்களின்

(12ஆம் பக்கம் பார்க்க)

## இலங்கைக்குக் கிடைக்கவுள்ள உதவி குறித்து தகவல் இல்லை

பாரிஸ்,டிசெ.21

இலங்கை அரசுக்கு கடந்த தடவை கிடைத்த அளவு உதவி இம முறை கிடைக்குமா என்பதற்கான அறிகுறி தென்படவில்லை என்று அரசியல் ஆய்வாளர்கள் கருத்து வெளியிட்டுள்ளனர்.

இலங்கைக்கு உதவி வழங்கும் நாடுகளின் கூட்டம் முடிவடைந்த போதும் இலங்கைக்கு வழங்க உத்தேசித்துள்ள உதவிகள் குறித்து உதவும் நாடுகளோ, இலங்கை அரசாங்கமோ, எதுவித உத்தியோக பூர்வ அறிக்கையையும் இதுவரை வெளியிடவில்லை.

இந்நிலையில் -

இலங்கைக்கு கடந்த தடவை கிடைத்த 78 கோடி டொலர் உபகரண மற்றும் கடன் உதவிகள் அளவு இம்முறை வழங்கப்பட்டதற்கான சாத்தியம் காணப்படவில்லை என்று அந்த விமர்சகர்கள் மேலும் கூறினர்.

அதேசமயம் -

''எமக்கு எவ்வளவு உதவி கிடைக்க வேண்டும் என்பது முக்கியமல்ல. எமது பொருளாதார சீர்திருத்தங்களை உலக வங்கி மற்றும் அதனைச்சார்ந்த அமைப்புக்களுக்குத் தெரியப்படுத்தவே உதவி வழங்கும் கூட்டம் கூட்டப்பட்டது'' என்று அரசமைப்பு விவகார அமைச்சர் பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ் பாரிஸில் கருத்து வெளியிட்டுள்ளார். (இ-3)

## மோதல் தணிப்புக்குத் தயார்! படை வாபஸுக்கு அல்ல!!

### பாரிஸில் சந்திரிகா தெரிவிப்பு

பாரிஸ்,டிசெ.21

விடுதலைப் புலிகளுடன் இலங்கை அரசு பேச்சு நடத்தும் போது மோதல் தணிப்பு ஒன்றை ஏற்படுத்தத் தயாராக இருக்கின்றோம். எனினும் வடக்கு - கிழக்கிலிருந்து படைகளை வாபஸ் பெறத் தயாராகவில்லை. பேச்சுகள் முழுமையாகப் பூர்த்தியாகி தீர்வு அமுல் செய்யப்படும் போதே படை வாபஸ் சாத்தியமாகும்.

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க மேற்கண்டவாறு தெரிவித்தார்.

பாரிஸில் புத்திஜீவிகள் மத்தியில் பேசுகையிலேயே அவர் இப்படிக் கூறினார்.

அவர் அங்கு பேசுகையில் மேலும் கூறியுள்ளதாவது:-

மூன்றாம் தரப்பாக நோர்வேயின் உதவியு

(12ஆம் பக்கம் பார்க்க)

## பல்கலைக்கழகத்தில் சங்கிலியன் படை சுவரொட்டிகள்

யாழ்ப்பாணம்,டிசெ.21

'ராகிங்' மற்றும் தகாத செயல்களில் ஈடுபடும் பல்கலைக்கழக மாணவர்களை எச்சரித்து யாழ்.பல்கலைக்கழக வளாகத்தில் சங்கிலியன் படை என்ற பெயரில் சுவரொட்டிகள் ஒட்டப்பட்டுள்ளன.

யாழ்பல்கலைக்கழக மாணவர்கள் சம்பந்தப்பட்டதாக கூறப்படும் எட்டுச் சம்பவங்களைச் சுட்டிக்காட்டி இந்தச் சுவரொட்டிகள் ஒட்டப்பட்டுள்ளன. (இ-5-6)

## இத்தாவில் பகுதியில் 2 சிப்பாய்கள் பலி!

கொழும்பு,டிசெ.21

இத்தாவில் பகுதியில் உள்ள படையினரின் முன்னரங்கநிலைகள் மீது நேற்றுமுன்தினம் காலை விடுதலைப் புலிகள் நடத்திய மோட்டார் தாக்குதலில் இரு படையினர் உயிரிழந்தனர் என்றும் இரு படையினர் காயமடைந்தனர் என்றும் விசேட ஊடகத் தகவல் நிலையம் அறிவித்துள்ளது.

அதேதினம் கிளாலிப் பகுதியில் இடம்பெற்ற மோதல் சம்பவம் ஒன்றில் விடுதலைப்புலி உறுப்பினர்கள் இருவர் உயிரிழந்தனர் என்றும் சிப்பாய் ஒருவர் காயமடைந்தார் என்றும் தகவல் நிலையம் மேலும் தெரிவித்தது. (இ-3)

## சைக்கிளில் நாடாளுமன்றம் சென்ற ஐ.தே. கட்சியினர்

கொழும்பு,டிசெ.21

டீசல் விலை ஏற்றம், அத்தியாவசியப் பொருள் விலை ஏற்றம், கூடுதலாக அமைச்சர், பிரதி அமைச்சர்களை நியமித்ததன் மூலம் அரசபணம் விரயமாக்கப்படல் ஆகியவற்றைக் கண்டிக்கும் வகையில் ஐ.தே.கட்சியின் 12 நாடாளுமன்ற உறுப்பினர்கள் சைக்கிள்களில் பவனியாக நேற்று நாடாளுமன்றம் சென்றனர்.

கம்பஹா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் டாக்டர் ஜயலத் ஜெயவர்த்தன தலைமையில் இந்தச் சைக்கிள் பவனி இடம்பெற்றது.

ராஜகிரிய சந்தியில் இருந்து மூன்று கிலோ மீற்றர் தூரத்துக்கு இடம்பெற்ற இந்தப் பவனி நாடாளுமன்றத்தில் முடிவடைந்தது.

யாழ்.மக்களின் அத்தியாவசியப் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண வேண்டும் என்று கோரி ஐ.தே.க. நாடாளுமன்ற உறுப்பினர் தி.மகேஸ்வரன் தலைமையில் சில உறுப்பினர்கள் கடந்த 6ஆம் திகதி மாட்டு வண்டியில் நாடாளுமன்றம் சென்றது தெரிந்ததே. (இ-3-7-8-10)

## சபையில் கூச்சல் குழப்பம்

கொழும்பு,டிசெ.21

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவின் வெளிநாட்டு விஜயம் தொடர்பாக அறிக்கை ஒன்றை சபை முதல்வர் ரிச்சர்ட் பத்திரான நாடாளுமன்றத்தில் நேற்றுப் பிற்பகல் விடுத்த சமயம் சபையில் பெரும் அமளிதுமளி ஏற்பட்டது.

இலங்கைக்கு நிதி வழங்கும் நாடுகளின் பிரதிநிதிகள், முதலீட்டாளர்கள், அபிவிருத்தி தொடர்பான அமைப்புகளின் பிரதிநிதிகள் ஆகியோரைச் சந்திப்பதற்காகவும்-

தமது கண் சிகிச்சைக்காகவும்-ஜனாதிபதி வெளிநாடு சென்றார் என்று ரிச்சர்ட் பத்திரான தமது அறிக்கையில் தெரிவித்தார்.

ஜனாதிபதி அரச நிதியை மட்டும் தமது பயணத்துக்குப் பாவித்தார் என்றும் -

அரச நிதியை துஷ்பிரயோகம் செய்யவில்லை என்றும் - அவர் மேலும் சொன்னார்.

கடந்த காலத்தில் ஜனாதிபதிகளாக இருந்த ஜே.ஆர்.ஜெயவர்த்தனா, பிரேமதாஸ போன்று தமது ஜனாதிபதி பண விரயம் செய்யவில்லை என்று அவர் கூறியதும் சபையில் அமளிதுமளி ஏற்பட்டது.

ஐ.தே.க நாடாளுமன்ற உறுப்பினர்களான ஜோண் அமரதுங்க, அஸ்வர் உட்பட ஏனைய உறுப்பினர்களுக்கும், பிரதி அமைச்சர் மேர்வின் டி சில்வாவுக்கும் இடையில் கடும் வாக்குவாதம் ஏற்பட்டது. (இ-3)

## நாளை ஒரு சேவை மட்டுமே!

யாழ்ப்பாணம்,டிசெ.21

பலாலி - இரத்மலானை விமான சேவையில் நாளை மறுதினம் சனிக்கிழமை இரு சேவைகள் இடம்பெறவுள்ளதாக யாழ்.சிவில் நிர்வாக அலுவலகம் அறிவித்துள்ளது.

நாளை ஒரு சேவை மட்டுமே இடம்பெறும். (இ-3)

## வவுனியாவில் துப்பாக்கிச் சூடு! பெண் பலி!!

வவுனியா, டிசெ.21

வவுனியா - பூந்தோட்டம் பகுதியில் நேற்றுப் பிற்பகல் 3 மணியளவில் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம் ஒன்றில் இரண்டு பிள்ளைகளின் தாய் ஒருவர் பரிதாபகரமாக உயிரிழந்தார்.

தம்பனைச்சோலையைச் சேர்ந்த ஜோண் பெர்னான்டோ றெஜீஸ்வரி (வயது 27) என்பவரே உயிரிழந்தவராவார்.

பூந்தோட்டம் அ.த.க. பாடசாலையில் ஜி.சீ.ஈ.சாதாரண தரப் பரீட்சைக்கான பாதுகாப்பை வழங்கி விட்டு கால் நடையாகச் சென்ற பொலீஸார் மீது பூந்தோட்டம் சந்தியில் வைத்து துப்பாக்கிப் பிரயோகம் நடத்தப்பட்டது எனவும் -

தொடர்ந்து அந்தப் பகுதியில் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில் சிக்கி மேற்படி குடும்பப் பெண் உயிரிழந்தார் எனவும் -

அவரது கையில் இருந்த இரண்டரை வயதுக் குழந்தை காயம் எதுவுமின்றி உயிர்தப்பியதாகவும் - தெரிவிக்கப்பட்டது. (ஐ-7-164)

## இருபாலை கிழக்கில் நேற்று ஷெல் வீச்சு!

### குடும்பஸ்தர் காயம்

யாழ்ப்பாணம்,டிசெ.21

இருபாலை கிழக்குப் பகுதியில் நேற்று பிற்பகல் 4.30 மணியளவில் வீழ்ந்து வெடித்த ஷெல்களினால் குடும்பஸ்தர் ஒருவர் காயம் அடைந்து யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

எட்மன் ஜோர்ஜ் (வயது 41-இருபாலை) என்பவரே காயம் அடைந்தவராவார்.

இருபாலை அரசடிப் பகுதிகளில் பத்துக்கு மேற்பட்ட ஷெல்கள் வீழ்ந்து வெடித்ததால் கோப்பாய், இருபாலைப் பகுதிகளில் பதற்றம் நிலவியது.

'மிக்' ரக விமானமும் கோப்பாயை அண்டிய பகுதிகளில் குண்டுத் தாக்குதலை நடத்தியது.

கைதடிப் பகுதியில் மோதல்கள் இடம்பெற்றதாகக் கூறப்பட்ட போதிலும் அதனை ஊர்ஜிதம் செய்ய முடியவில்லை. (இ-3-5-6-10-72-180)

## வீடு பார்க்கச் சென்ற எண்மர் திரும்பவில்லை!

### மிருசுவில் வடக்கில் சம்பவம்

தென்மராட்சி,டிசெ.21

மிருசுவில் வடக்கில் உள்ள தமது வீடுகளைப் பார்ப்பதற்காக நேற்று முன்தினம் காலை அங்கு சென்ற ஒரே குடும்பத்தைச் சேர்ந்த அறுவர் உட்பட எட்டுப் பேர் நேற்று மாலை வரை திரும்பவில்லை எனத் தெரிவிக்கப்பட்டது.

மிருசுவில் வடக்கில் உள்ள வீட்டைப் பார்ப்பதற்காக ஒன்பது பேர் நேற்றுமுன்தினம் காலை 9 மணிக்கு அங்கு சென்றனர்.

அவர்களில் ஒருவரான பொன்னுத்துரை மகேஸ்வரன் (வயது 23) என்பவர் அடிகாயங்களுக்கு இலக்காகி மந்திகை ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

தமது வீடுகளில் உள்ள பொருள்களை எடுத்துக் கொண்டிருந்த சமயம் அங்கு வந்த சீருடையினர் தங்களைக் கைது செய்து விசார

(12ஆம் பக்கம் பார்க்க)

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

# இலங்கை கல்வி நிர்வாக சேவை தரம் III பரீட்சைக்கான வழிகாட்டல் கருத்தரங்கு

இடம் - யாழ்ப்பாணம் இந்து மகளிர் கல்லூரி
காலம்- 24.12..2000 ஞாயிறு காலை 8.30 மணி

2001ஆம் ஆண்டு ஜனவரி மாதம் இலங்கை கல்வி நிர்வாக சேவையின் III ஆம் வகுப்பிற்கு தமிழ் மொழிமூல உத்தியோகத்தர்களை (பொதுப்பதவியணி) ஆள்சேர்ப்பதற்கான மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப்பரீட்சையை நடத்த கல்வியமைச்சு திட்டமிட்டுள்ளது. பலரின் வேண்டுகோள்களுக்கிணங்க பரீட்சையில் தோற்றும் சகல ஆசிரியர்களுக்கும் உதவும் நோக்கில் கல்விப்புலம் சார் நிபுணர்களின் ஒருங்கிணைந்த வழிகாட்டலில் '*பட்டதாரி ஆசிரியர் வாண்மைவிருத்தி அமைப்பினரால்*' 'கல்வியியற் கருத்தரங்கு ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது. ஆர்வமுள்ள அனைவரையும் பங்குபற்றுமாறு அழைக்கிறோம். அச்சடித்த குறிப்புக்களும் வழங்கப்படும்.

**GRADUATE TEACHER PROFESSIONAL, DEVELOPMENT ORGANIZATION.**

திரு.ஏ.சி.ஜோர்ஜ்,
செயலாளர்.

திரு.பா.தனபாலன்,
தலைவர்.

(C/14387)

# 31ஆம் நாள் நினைவு அஞ்சலியும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையும் நன்றி நயத்தலும்



## அமரர் ஆசிரியஜோதி
## ஆறுமுகம் சுப்பையா

மண்ணக வாழ்வில் 1919- 07- 14
வைகுந்த நுழைவு 2000- 11- 21

2000-11-21 செவ்வாய்க்கிழமை ஏகாதசித் திதியில் வைகுந்த வாழ்வு பெற்று அமரத்துவமடைந்த அமரர் ஆசிரியஜோதி அவர்களின் 31ஆம் நாள் ஆத்ம சாந்தி அஞ்சலி நிகழ்வுகள் அவரின் மகன் இல்லத்தில் *இன்று 2000-12-21 வியாழக்கிழமை* இடம்பெறும் என்பதை அறியத் தருவதோடு அவரின் தேகவியோக தினத்திலும் தொடர்ந்த நாள்களிலும் அவரது இளைய மகள் சிவதட்சணாமூர்த்தி ஆனந்தவல்லி அவர்களின் இல்லத்திற்கு வருகை தந்து அன்னாரின் அமரத்துவ நினைவாக துயரில் பங்குகொண்டு ஆறுதலும் தேறுதலும் அன்புடன் வழங்கிய இனிய நெஞ்சங்களுக்கும் தந்திகள், இரங்கற் செய்திகள் வரைந்தனுப்பிய விருப்பாளர்களுக்கும் என்றும் எமது மனமார்ந்த நன்றிகள்.

**அன்னாரின் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கும் :**
சி.நடராசா ஜெயலட்சுமிதேவி குடும்பத்தினர்,
சு.சண்முகசிவானந்தன் லோகநாயகி குடும்பத்தினர்,
(பிரதம பொறியியலாளர், நீர்ப்பாசன திணைக்களம்-புத்தளம்),
கி.சிவதட்சணாமூர்த்தி ஆனந்தவல்லி குடும்பத்தினர்,
(உதவிப்பணிப்பாளர், பிரதேச செயலகம்-சங்கானை;
தே.இ.சே.ம.- யாழ்ப்பாணம்)

*தொட்டிலடி,சங்கானை.* (C/14370)

# கண்ணீர் அஞ்சலி



நீர்வேலி ஸ்ரீ கந்தசுவாமி தேவஸ்தான பிரதமகுரு
"வேதாகம சாஸ்திரஜோதி"
**சிவஸ்ரீ**
## சுவாமிநாத. இராஜேந்திரக்குருக்கள்

அவர்கள் சிவனடி சேர்ந்துவிட்டார் என்ற செய்திகேட்டு ஆழ்ந்த கவலை அடைகிறோம். இவரின் இழப்பு சைவ உலகிற்கும், அந்தணப் பெருமக்களுக்கும் பேரிழப்பாகும். இலங்கைத் திருநாட்டில் தலைசிறந்த சிவாச்சாரியார்களில் ஒருவராகவும், சோதிட விற்பன்னராகவும் திகழ்ந்தவர் ஆவார். மீளாத்துயரில் துயருறும், அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த கவலையையும், அனுதாபத்தையும் தெரிவித்து, இவரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

*ஊரெழு.* (81894) **சிவாச்சார்யார் பீடம்**

## மீனவர் நிவாரணம்

யாழ்ப்பாணம்,டிசெ.21
யாழ்.பிரதேச செயலர்பிரிவில் ஜே-68, ஜே-69 ஆகிய கிராம அலுவலர் பிரிவுகளிலுள்ள கடற்றொழிலாளர்களுக்கான நிவாரணம் நாளை மறுதினம் சனிக்கிழமை காலை 9 மணிக்கு வழங்கப்படவுள்ளது.

நக்கா றோட் தையல் பயிற்சி நிலையத்தில் வைத்து இந்த நிவாரணம் வழங்கப்படவுள்ளது. குடும்பம் ஒன்றுக்கு ஆயிரத்து 500 ரூபா வீதம் நிவாரணம் வழங்கப்படும்.

தேசிய அடையாள அட்டை, கிராமஉத்தியோகத்தர் உறுதிப்படுத்திய கடிதம், நிவாரண அட்டை ஆகியன சகிதம் நேரில் சென்று நிவாரணத்தைப் பெற்றுக் கொள்ளலாம் என்று பிரதேச செயலக வட்டாரங்கள் தெரிவித்தன. (ம-5)

## சஞ்சிகை வெளியீடு

உரும்பிராய் றோமன் கத்தோலிகப் பாடசாலையின் வெளியீடான "தாரகை" சஞ்சிகை பாடசாலை மண்டபத்தில் அதிபர் மு.விக்கினேஸ்வரன தலைமையில் அண்மையில் வெளியிட்டு வைக்கப்பட்டது.

இவ்விழாவில் யாழ்ப்பாணம் தேசிய கல்வியியல் கல்லூரி உபபீடாதிபதி பா.தனபாலன் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார். (ஐ-152)

## வடமராட்சியிலும் பாதீனியம் களை பரவுகிறது

பருத்தித்துறை, டிசெ.21
வடமராட்சிப் பகுதியிலும் பல இடங்களில் பாதீனியம் களை பரவியுள்ளது.

வல்லை உப்பு றோட் பகுதியில் பாதீனியம் பரவிக் காணப்படுகிறது. இக் களை ஏனைய பகுதிகளுக்கும் பரவும் ஆபத்து ஏற்பட முன்னர் இவற்றை முற்றாக அழிக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென விவசாயிகள் வடமராட்சி கமநல சேவை நிலையத்தில் முறையிட்டுள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-118-173)

## நுளம்பு வலை விநியோகம்

தென்மராட்சி,டிசெ.21
யாழ். மாவட்டத்தில் மலேரியாக் காய்ச்சல் ஒழிப்புத் திட்டத்தின் கீழ் 'யுனிசெவ்' நிறுவனத்தினரால் வழங்கப்பட்ட 400 நுளம்பு வலைகள் வடமராட்சிப் பிரதேசத்தில் மலேரியா பரவியுள்ள குடவத்தை, குடத்தனை, துன்னாலை வடக்கு ஆகிய கிராம அலுவலர் பிரிவுகளைச் சேர்ந்த குடும்பங்களுக்கு பருத்தித்துறை சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையில் வைத்து வழங்கப்பட்டன.(ஐ-117-109)

## முதலுதவி பயிற்சி

தென்மராட்சி,டிசெ.21
கரவெட்டி பிரதேச கிராமிய அபிவிருத்திப் பிரிவினரால் நடத்தப்படும் தையல் பயிற்சி வகுப்பில் கலந்து கொள்ளும் யுவதிகளுக்கான முதலுதவி பயிற்சி வகுப்பு அண்மையில் பயிற்சி நிலைய மண்டபத்தில் நடைபெற்றது.


யாழ்.கிராமிய மாவட்ட சென் ஜோன்ஸ் அம்புலன்ஸ் படைப்பிரிவின் மாவட்ட ஆணையாளர் நா. போஜன் இப் பயிற்சி வகுப்பினை நடத்தினார். (ஐ-117)

ராஜா யாழ்ப்பாணம்
அஜித் (இரு வேடம்)
சிம்ரன், ஜோதிகா, விவேக்
மற்றும் பலரின் நடிப்பில்
வாலி
காட்சிகள்:10.30, 2.00 (பு.நே.)
நாளை முதல்
மின்சாரக் கண்ணா
C/14247

நாகர்ஸ் சுன்னாகம்
விஜய், ஜோதிகா நடித்த
S.J.சூர்யாவின்
குஷி
தினசரி - 11.00, 2.30 (பு.நே.)
அடுத்த வெளியீடு
சுதந்திரம்
(81914)

# நன்றி நவிலலும் 31ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்

மண்ணுலகில் 12 . 07 . 1917



விண்ணுலகில் 21 . 11 . 2000

## திருமதி யோகம்மா நாகரத்தினம்

21.11.2000 அன்று சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவி திருமதி யோகம்மா நாகரத்தினம் அவர்களின் இறுதிச் சடங்கில் கலந்து கொண்ட உறவினர், அயலவர், நண்பர்கள் ஆகியோருக்கும் மற்றும் பல்வேறு வழிகளில் உதவி புரிந்தவர்களுக்கும் எமது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

*இன்று (21.12.2000) வியாழக்கிழமை காலை 10.30 மணிக்கு* எமது இல்லத்தில் நடைபெறும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் தொடர்ந்து இடம்பெறும் மதியபோசனத்திலும், கலந்துகொள்ளுமாறு உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

*தேவன் குறிச்சி,*
*இலக்கணாவத்தை,*
*உடுப்பிட்டி.* (81925)

உங்கள் பிரிவால் துயருறும்:
மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்,
பூட்டப் பிள்ளைகள்.

# இதய அஞ்சலி

நீர்வேலி அருள்மிகு கந்தசுவாமி கோயில் பிரதம குருவும் நாடறிந்த வேத விற்பன்னருமாகிய எங்கள் குலகுரு



## சுவாமிநாத. இராஜேந்திரக் குருக்கள்

(இராசுக் குருக்கள்)

இறைநிலையடைந்தமை குறித்து எமது தேவஸ்தானம் இதய அஞ்சலிகளைச் சமர்ப்பிக்கிறது.

★குருக்கள் ஐயரவின் இறுதிவைபவம் இன்று (21-12-2000) வியாழக்கிழமை காலை 8.00 மணியளவில் நடைபெறும்.★

*நீர்வேலி* (81902)

**ஆலய பரிபாலன சபை,**
**நீர்வேலி கந்தசுவாமி கோயில்**

# கண்ணீர் அஞ்சலி



அமரர்
## கதிரவேலு பரமசாமி

தலையாழி அருள்மிகு ஸ்ரீ ஞானவைரவர் ஆலய பரிபாலன சபை, வழிபடுநர் சபைகளின் செயலாளர் அவர்கள் சிவபதமடைந்தமையையிட்டு எங்கள் கண்ணீர் அஞ்சலியைக் காணிக்கையாக்குகின்றோம். அன்னாரின் ஆத்மா ஸ்ரீ ஞானவைரவப் பெருமானின் பாதத்தில் சாந்தியடையப் பிரார்த்திப்பதோடு அன்னாரின் குடும்பத்தினருக்கு எங்கள் ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரி வித்துக் கொள்ளுகிறோம்.

ஆலய குரு,
பரிபாலன சபை,
வழிபடுநர் சபை,
தொண்டர் சபை,
அறநெறிப் பாடசாலை.

தலையாழி
ஸ்ரீ ஞானவைரவர் கோயில்,
கொக்குவில் (81911)

# உதயன்

## இடைவெளியை நிரப்புவதற்கு.....

கடந்த திங்கள், செவ்வாய்க் கிழமைகளில் பாரிஸில் நடைபெற்ற இலங்கைக்கு உதவும் நாடுகளின் மாநாட்டில் இருபத்தைந்துக்கும் மேற்பட்ட வெளிநாடுகள் பங்குபற்றின. அவற்றில் பெரும்பாலானவை ஐரோப்பிய நாடுகளே. அந்த வகையில் அந்நாடுகள் அங்கம் வகிக்கும் ஐரோப்பிய ஒன்றியம் மேற்படி மாநாட்டில் அறிக்கை ஒன்றை வெளியிட்டிருந்தது.

பிரஸ்தாப அறிக்கை மிகவும் நீளமானது. இலங்கையின் சமீபகாலத் தேர்தல்களில் இடம்பெற்ற முறைகேடுகள், இந்த நாட்டில் அடிப்படை உரிமைகள் — மனித உரிமைகள் — உரிய முறையில் பேணப்படாமை, பிந்துனுவெவத் தடுப்பு முகாமில் நடைபெற்ற கொன்று குவிப்புச் சம்பவம், விடுதலைப்புலிகளால் மனித உரிமைகள் மீறப்படுதல் — குறிப்பாக சிறுவர்களைப் படையில் சேர்த்தல் — அரசு பாதுகாப்புத்துறைக்கு அதிக பணத்தைச் செலவிடுதல் — என்று பல அம்சங்கள் குறித்தும் அந்த அறிக்கையில் எடுத்துரைக்கப்பட்டுள்ளது.

இனப்பிரச்சினை குறித்தும், அமைதிப் பேச்சுக்கள் குறித்தும் அந்த அறிக்கையில் உரிய கவனம் செலுத்தப்பட்டிருந்தது.

இலங்கையின் சிறுபான்மைத் தமிழ் மக்களின் அபிலாசைகளை நிறைவேற்றக்கூடிய தீர்வு ஒன்றை எட்டுவதற்குக் காலதாமதம் இன்றி உடன் பேச்சுக்களை ஆரம்பிக்குமாறு சகல தரப்புகளுக்கும் அழைப்பு விடுக்கின்றோம் — என்று ஐரோப்பிய ஒன்றியம் தனது அறிக்கையில் கோரிக்கை விடுத்துள்ளது!

நோர்வே அரசாங்கம் முன்னெடுத்துள்ள சமாதான முயற்சிகளை ஐரோப்பிய ஒன்றியம் முழு அளவில் ஆதரிக்கிறது. நோர்வேயின் சமாதானத் தூதுவர். விசேட தூதுவர், எரிக் சொல்ஹெய்ம் விடுதலைப் புலிகளின் தலைவர் வே. பிரபாகரனைச் சந்தித்ததன் மூலம் உண்டான புதிய திருப்பத்தை ஆக்கபூர்வமாகப் பயன்படுத்த வேண்டும் என்ற சர்வதேச மட்டத்திலான கருத்தை அது வலியுறுத்துகிறது.

ஆனால் நவம்பர் மாதம் முதலாம் திகதிக்கு — எரிக் சொல்ஹெய்ம் தலைவர் பிரபாகரனைச் சந்தித்த நாளுக்கு—பின்னர் வந்துள்ள ஐம்பது நாள்களில் வெளியாகியுள்ள கருத்துக்களும் நிலைப்பாடுகளும் நல்ல தருணம் நழுவவிடப்பட்டு விடுமோ என்ற சந்தேகத்தை — உண்மையில் அச்சத்தை — உருவாக்கி உள்ளன.

இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்குக் கிடைத்த நல்ல தருணங்கள் பலப்பலவும் நழுவ விடப்பட்டதுதான் இலங்கையின் அரசியல் வரலாறு. அவை போலவே இப்போதைய மிக அரிய சந்தர்ப்பமும் மாறிவிடப் போகிறதோ என்பது தான் சமாதான விரும்பிகளின், அமைதி விரும்பிகளின் அச்சமாகி உள்ளது.

இரு சாரார்களினது நிலைப்பாடுகளும் மேலும் விரிசல் கண்டுவிடாமல் இடைவெளியை நிரப்பி மேவச் செய்து சீராக்க வேண்டியதவசியம்.

அதனையே ஐரோப்பிய ஒன்றியத்தின் அறிக்கை வலியுறுத்துகிறது. ஒன்றியத்தின் நிலைப்பாடு வரவேற்கக் கூடியது. அறிக்கையாக மட்டுமே நின்று விடாமல் செயல்வடிவில் — நடைமுறையில் —அழுத்தம் கொடுக்க வேண்டும். சர்வதேசம் அதனையே செய்ய வேண்டும் என்று தமிழ் மக்கள் எதிர்பார்க்கிறார்கள்.

# அன்பு மயமான ஆண்டவனை இன்ப மயமாக இறைஞ்சுவோம்

உள்ளத்தை உள்ளவாறு உணர்ந்து தெளியும் நிலை ஆன்மீகத்துள் அடக்கம். அண்டத்துள் இருப்பது பிண்டத்துள்ளும் பிண்டத்துள் இருப்பது அண்டத்துள்ளும் அடங்கும்.

### ஆறு சுவைகள்

ஒரு தாய்க்கு ஆறு பிள்ளைகள்; ஒரு நாள் தந்தை ஒரு கிலோ முருங்கைக்காய் வாங்கி வந்தார். தாய் அந்த முருங்கைக்காயை ஆறு விதமாகக் கறி சமைத்து தன் ஆறு பிள்ளைகளுக்கும் கொடுத்தாள். முருங்கைக்காய் வெள்ளைக்கறி, பத்தியக்கறி, பொரித்துக் குழம்பு, வறை, பிரட்டல், உருட்டல் ஆகிய இவற்றை உண்டபின் ஒரு மகன் சொன்னான்:

''நான் சாப்பிட்ட கறி மிக நன்றாக இருந்தது; இது தான் கறி, ருசியான கறி'' என்று.

இன்னொரு மகன் சத்த மிட்டுச் சொன்னான்:

நான் சாப்பிட்ட கறிதான் மிக மிக நல்லது'' என்று. இதற்கிடையில் சண்டை முற்றியது. அதனைக் கண்ட தாய் பதை பதைத்து ஓடி வந்தாள்.

''ஏன் தேவையற்ற வீண் சண்டை? எல்லாம் முருங்கைக்காய் கறிதான் மூத்தவனுக்கு வயிற்றிலே புண். அதனால் தான் போடாமல் சமைத்தேன்'' என்றாள்.

அதைக் கேட்ட மூத்தவனுக்குக் கோபம் வந்து தாயைப் பேசினான். ''எல்லாம் முருங்கைக்காய் என்று சொல்லுகிறாய்! நீ ஒரு நச்சுக் கிருமி'' என்றான்.

பிரபஞ்சத்தின் சக்தியான பரப்பிரம்மம், பல விதமான உருவங்களில், பல வித பெயர்களில் கடவுளாகக் காட்சியளிக்கின்றார். கடவுள் ஒருவர் தான். அவருக்குப் பெயர்கள் பல, கடவுள் ஒருவரே; ரூபங்கள் பல.

### கடவுள் ஒருவர் தான்

இந்தச் சம்பவத்திலிருந்து நாம் தெரிந்து கொள்ளவேண்டியது என்ன? கறி ஒன்று தான் சுவைதான் வேறு கடவுள் ஒருவரே! அவர் அன்பு வடிவத்தில் பல கோணங்களில் காட்சி தருகின்றார்.

சூரியன் ஒருவனே! அவன் உலகெங்கும் ஒளி வீசுகின்றான். மேலும் மனிதர்கள் எல்லோரும் வாயால் உண்கிறார்கள்; மூக்கால் சுவாசிக்கிறார்கள். கடவுள் பலவாக இருந்திருந்தால் ஒவ்வொரு சமயத்தவர்களுக்கும் வாயையும், மூக்கையும், மூளையையும், சிறுநீரகத்தையும் வேறு வேறு வடிவில் மாற்றியல்லவா அமைத்திருப்பார்? ஆகவே கடவுள் ஒருவர் தான்; சமயங்கள் பல. இடம் ஒன்று தான்; ஆனால் போய்ச் சேரும் வழிகள் பலவாகும்.

எவரும் தன்னுடைய சமயத்திலிருந்து மாறவேண்டிய அவசியம் இல்லை மற்றவரை மாற்ற வேண்டிய அவசியமுமில்லை. ஆறுமுகநாவலர், சமயம் மாற்றுவோரைக் கண்டித்தாரே தவிர சமயங்களைக் கண்டிக்கவில்லை.

சுவாமி விவேகானந்தர் மேல் நாடுகளில் முழக்கமிட்டார்;''எல்லாச் சமயங்களையும் அரவணைக்கும் ஒரு சமயத்தின் சார்பில் பேசுகிறேன்'' என்று.

ஸ்ரீ இராமகிருஷ்ண பரமஹம்சர் எல்லாச் சமயங்களிலிருந்தும் சாதனை செய்து வாழ்ந்து காட்டினார். இந்து சமயத்தவனாக, முஸ்லிமாக, கிறிஸ்தவனாக தன்னை மாற்றி சாதனைகள் பல புரிந்து ஈற்றில் கடவுள் ஒருவரே என்று கண்டு கொண்டார்.

## பாபாவின் அருள்வாக்கு

சீரடிசாயி முஸ்லிம் பள்ளி வாசலில் இருந்து வேதம் ஓதும் பிராமணர்கள், முஸ்லிம்கள் எல்லோரையும் ஒன்று சேர்த்து கடவுள் ஒருவரே என்று உணர வைத்தார். இதை யார் உணரமாட்டார்கள்? சமயத்தை வைத்து வியாபாரம்செய்யும் வியாபாரிகள், தன்னைப் பெரியவனாக உலகம் மதிப்பதற்காக வேடம் போடும் வேஷதாரிகள்.

தன்னுடைய சமயத்தை சரியாகப் படித்தவன், உணர்ந்தவன், பின் தெளிந்தவன், நடைமுறையில் வாழ்பவன்-இவன் கண்டு கொள்வான் எல்லாச் சமயத்திற்குள்ளும் புதைந்து கிடக்கும் அன்பு (பிரேமை) என்னும் பெரும் பொக்கிஷத்தை.

### அன்பின் வடிவமே கடவுள்

'' அன்பே சிவமாவது யாரும் அறிகிலார்'' என்று கவலை அடைகின்றார் திருமூலர். அன்பு என்பது ஒரு தலைப்பட்சமானது அல்ல, உலக உயிர்கள் அனைத்தும் அன்பின் வடிவமே! கடவுள்

### ''ஈசன்''

அன்பு மயமானவர். இதை உணராமல் போனதால் தான் இன்று உலகெங்கும் போராட்டம், அமைதியின்மை தாண்டவமாடுகின்றது.

ஒரே மதம் — அது அன்பெனும் மதம்!

ஒரே ஜாதி — அது மானிட ஜாதி!

ஒரே மொழி — அது இதய மொழி!

ஒரே கடவுள் — அவர் எங்கும் நிறைந்தவர்!

இதுவே பகவான்ஸ்ரீசத்திய சாயிபாபாவின் அருள்வாக்கு.

கிறிஸ்தவர்கள், இந்துக்கள், முஸ்லிம்கள், யூதர்கள், பௌத்தர்கள் என்று எல்லாச் சமயத்தவர்களுமே ஒன்று கூடுகின்றார்கள் இந்தியாவில் புட்டபர்த்தி என்னும் இடத்தில்; ஏன்? அங்கு அன்பு நடமாடுகின்றது, அன்பு ஒளி வீசுகின்றது அன்பு பேசுகின்றது. உணர்ந்தவர்களுக்குத் தான் இது புரியும். ★

## எதிர்க்கட்சி செல்வாக்குப் பெற்ற

# கனேடிய மாநிலத்தில் ஈழ அமைப்பு மீது கெடுபிடி

ஒற்றாவா, டிசெ. 21

கனடாவில் எதிர்க்கட்சி செல்வாக்குப் பெற்ற மாநிலமான பிரிட்டிஷ் கொலம்பியாவில், விடுதலைப் புலிகளுக்கு உதவும் அமைப்புகளின் மீது கெடுபிடிகள் கடுமையாக்கப் பட்டுள்ளன.

விடுதலைப் புலிகளுக்கு உதவும் அமைப்புகள் குறித்து, கனடா உளவு சேவையினர் சமீபத்தில் அறிக்கை ஒன்றை வெளியிட்டிருந்தனர்.

அந்த அறிக்கையில், விடுதலைப் புலிகளுக்கு உதவி வழங்கும் பிரதான அமைப்பாக ஈழம் தமிழ் அமைப்பு குறிப்பிட்டுள்ளது.

அத்துடன் கனடாவில் ஆண்டுதோறும் 10 தொடக்கம் 20 கனேடிய டொலர்கள் வரை திரட்டப்பட்டு விடுதலைப் புலிகளுக்கு வழங்கப் படுவதாகவும் கூறப்பட்டிருந்தது.

இந்த அறிக்கையை அடுத்து எதிர்க்கட்சி செல்வாக்குப் பெற்ற பிரிட்டிஷ் கொலம்பியா அரசு, புலிகளுக்கு உதவும் அமைப்புகளின் வரவு செலவுக் கணக்குகளை மதிப்பீடு செய்யும்படி தனது அதிகாரிகளுக்கு உத்தரவிட்டுள்ளது.

அத்துடன் ஈழம் தமிழ் அமைப்புக்கான உதவிக் கொடுப்பனவுகளை நிறுத்தும் படியும் அந்த மாநில அரசு கட்டளையிட்டுள்ளது.

கனடாவில் வாழும் இலங்கைத் தமிழர்கள் ஆதரித்த கட்சியே, கடந்த தேர்தலில் வெற்றி பெற்று தேசிய ஆட்சியைக் கைப்பற்றியுள்ளது.

தேர்தலின் போது புலிகளுடன், ஆளும் கட்சிக்கு தொடர்பு உள்ளதாகக் குறை கூறி எதிர்க்கட்சி பிரசாரம் செய்தது குறிப்பிடத்தக்கது.

(ஒ-8)

# காஷ்மீரில் தாக்குதல் நிறுத்தம் மேலும் ஒரு மாதம் நீடிப்பு

## பிரதமர் வாஜ்பாய் அறிவிப்பு



புதுடில்லி, டிசெ. 21

காஸ்மீரில் தாக்குதல் நிறுத்தம் மேலும் ஒருமாத காலம்நீடிக்கப்பட்டுள்ளது.

நேற்று இந்திய நாடாளுமன்ற மக்களவையில் பிரதமர் வாஜ்பாய் இதனை அறிவித்தார்.

நீடிப்புக் காலம் முடிவடைந்த பின்னர் அப்போதைய நிலைமையை அரசு மீண்டும் பரிசீலிக்கும் என்றும் அவர் கூறினார்.

ரமழான் நோன்பு காலத்தில் காஷ்மீர்த் தீவிரவாதிகளுக்கு எதிரான தாக்குதலை ஒருதரப்பாக நிறுத்தி வைப்பதாக அரசு அறிவித்தது முதல் அங்கு தீவிரவாதச் சம்பவங்கள் கணிசமான அளவு குறைந்துள்ளதாக வாஜ்பாய் மேலும் கூறினார்.

லஸ்கர்- இ- தொய்பா போன்ற சில அமைப்புக்கள் மட்டும் தொடர்ந்து வன்முறைச் சம்பவங்களில் ஈடுபட்டு வருவதாக பிரதமர் விசனம் தெரிவித்தார்.

பாகிஸ்தானுடன் ஒருங்கிணைந்த உரையாடலை மீண்டும் தொடங்க ஆயத்த நடவடிக்கைகளைத் தேவையானால் அரசு ஆராயத் தயாராக உள்ளதாகவும் அவர் கூறினார்.

(ஓ)

# 'மிஸிஸ்-வேர்ல்ட்' பட்டமும் இந்தியாவுக்கே

இந்தியாவின் மும்பையைச் சேர்ந்த முன்னாள் 'மொடல்' அழகி அவிதி கோபிக்கர் ''மிஸிஸ்-வேர்ல்ட்'' ஆகத் தெரிவுசெய்யப்பட்டுள்ளார்.

திருமணம் ஆன பெண்களுக்கிடையே சர்வதேச ரீதியில் நடத்தப்பட்ட போட்டியில் பட்டம் வென்ற அவிதியின் கணவர் மருத்துவர்.

இவர்களுக்கு 3 வயதில் ஒரு மகளும் உண்டு.

## நாளை

**மார்கழி 07**

**வெள்ளிக்கிழமை**

திதி: துவாதசி

முன் இரவு 8.03 வரை.

நட்சத்திரம்: விசாகம்

முன் இரவு 12.20 வரை

சுபநேரம்: 6 25-7.55

ராகுகாலம் 10 55-12 25

(பகலுக்கும் இரவுக்கும் பழைய நேரப்படி)

# இந்தி நடிகருக்கு பிரிட்டனில் சிலை

லண்டன், டிசெ. 20

பிரிட்டனில் உள்ள உலகப் புகழ் பெற்ற 'மேடம்டுசார்ட்' மெழுகுச் சிலை காட்சி நிலையத்தில் இந்தித் திரைப்பட நடிகர் அமிதாபபச்சனின் மெழுக உருவச்சிலை திறந்து வைககப்பட்டுள்ளது.



உலகில் பிரபலமானவர்களின் உருவங்களை தத்ரூபமாக மெழுகில் செய்து காட்சிக்கு வைத்துள்ள 'மேடம்டுசார்ட்' நிலையத்தில் இந்திய நடிகர்களில் முதல் முறையாக அமிதாப்பச்சனுக்கு சிலை வைக்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

(ஒ-8)

# தொழிற்சாலை தீ விபத்தில 5 பேர் பலி

மும்பை, டிசெ 21

இந்தியாவின் மகாராஷ்டிரா மாநிலம், அரியாரில் மருந்துத் தொழிற்சாலையில் ஏற்பட்ட தீ விபத்தில் 5 ஊழியர்கள் உடல் கருகி இறந்தனர்; 6 பேர் காயம் அடைந்தனர்.

மருந்து வகைகளை தயாரிக்கும் பகுதிகளில் பெரும்வெடிச் சத்தம் கேட்டதாகவும்—

அதனைத் தொடர்ந்து தீ வேகமாகப் பரவியதாகவும் கூறப்படுகின்றது.

(ஸ்ரீ)

### உதயவாக்கு

கரங்களால் பணத்தை எறிபவன் காலால் அதனைத் தேட வேண்டும்.

-இத்தாலிய பழிமொழி

## முதலாம் ஆண்டு நினைவில்



தோற்றம் 06 – 06 – 1930
மறைவு 02 – 01 – 2000

### திருமதி சரஸ்வதி தர்மலிங்கம்

திதி:- 21-12-2000

மறைவின் துயரிலும் பாசத்தின் உந்துதலிலும் உங்கள் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

கணவன், மக்கள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

க. தர்மலிங்கம்,
கொக்குவில் மேற்கு,
கொக்குவில். (81843)

## 13 ஆம் ஆண்டு நீங்கா நினைவலைகள்



மண்ணில் மலர்வு 09 – 11 – 1936
விண்ணில் விரவை 21 – 12 – 1987

### அமரர் சீ. செல்லத்துரை

(யாழ். அரசினர் வைத்தியசாலை, முன்னாள் மேற்பார்வையாளர்)

பதின்மூன்றாண்டுகள் !
பாசத்தின் திருவுருவே! பாவிகளாகி விட்டோம் நாம் பாரினில், பந்தங்கள், பாசங்கள் பொய்யாகுமோ!

தங்கள் நினைவுடன்,
- குடும்பத்தினர்.

"ஈஸ்வரி வாசம்,"
உரும்பிராய் மேற்கு,
உரும்பிராய். (81863)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



மலர்வு 05 – 04 – 1928
உதிர்வு 02 – 01 – 2000

### அமரர் தம்பாபிள்ளை சுப்பிரமணியம்

(ஓய்வுபெற்ற ஆசிரியர்)

திதி: 21-12-2000 (ஏகாதசி)

ஆண்டொன்று மறைந்ததப்பா
ஆனால் உங்கள் அன்புமுகம் மறையவில்லை.
ஆறாத் துயரில் எம்மை மூழ்கவிட்டு
ஆண்டவன் திருப்பதம் நாடிச் சேர்ந்தீர்கள் அப்பா!

உங்கள் ஆத்ம சாந்திக்காக எல்லாம் வல்ல மருதடி விநாயகரை வேண்டுகின்றோம்.

மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், சகோதரர்,
மைத்துனர், பேரப்பிள்ளைகள்.

கட்டுவன்,
வர்த்தலைவிளான்,
தெல்லிப்பழை. (81884)

## பயண அனுமதி பெற்றோர் விவரம்

யாழ்ப்பாணம், டிசெ. 21
வெளியிடங்களுக்குச் செல்வதற்கான பாதுகாப்பு அனுமதி பெற்றோர் விவரம் இம்மாதம் 19 ஆம் திகதிவரை பிரதேச செயலக ரீதியாக வருமாறு:-

**சங்கானை**

(158508ஏ), (158508பி). (158508சி), (160528ஏ), (172726ஏ), (172995ஏ), (173044ஏ), (174727ஏ), (174742ஏ), (174742பி), (174742சி), (174820ஏ), (174820பி), (174836ஏ), (175031ஏ), (175148ஏ), (175148பி).

**யாழ்ப்பாணம்**

(148199ஏ), (148199பி), (171852ஏ), (171867ஏ), (171957ஏ), (172049ஏ), (172049பி), (172049சி), (172050ஏ), (172118ஏ), (173400சி), (173498ஏ), (173500ஏ), (173500பி), (173508ஏ), (173508பி), (173623ஏ), (173623பி), (173633பி), (173642ஏ), (173647ஏ), (173647பி), (173662ஏ), (173694ஏ), (173711சி), (173714ஏ), (173714பி), (173714சி), (173714டி), (173714ஈ), (173714எவ்), (173717ஏ), (173717பி), (175288ஏ), (175458ஏ),

**கோப்பாய்**

(154561ஏ), (154561பி), (154561சி), (162573ஏ), (162573பி), (163659ஏ), (168263ஏ), (168263பி), (168263 ), (168351ஏ), (168372ஏ), (168385ஏ), (168385பி), (168421ஏ), (173223ஏ), (173237ஏ), (173237பி), (173237சி), (173286ஏ), (173286பி), (173286சி), (173298ஏ), (173298பி),

**நல்லூர்**

(152498ஏ), (161061ஏ), (161061பி) (166264ஏ), (166399ஏ), (168587ஏ), (168587பி), (168587சி), (168735ஏ), (171913ஏ), (171913பி) (171913சி), (171913டி), (171913ஈ), (171973எவ்), (171936ஏ), (151936பி), (171936சி), (171943ஏ), (171943பி), (171967ஏ), (173545ஏ), (173603ஏ), (173603பி), (173625ஏ), (173650ஏ), (173689ஏ), (173709ஏ), (173709பி), (175230ஏ), (175230பி), (175230சி), (158567ஏ), (158567பி), (158567சி), (158567டி), (169346ஏ), (170111ஏ), (172730ஏ), (175024ஏ),

**சண்டிலிப்பாய்**

(170217ஏ), (170217பி), (172850ஏ), (172958ஏ), (172958பி), (173843ஏ), (175004ஏ), (175004பி), (175119ஏ), (175181ஏ), (175181பி).

**தெல்லிப்பழை**

(169283ஏ), (170104ஏ), (170104பி), (170104சி), (170104டி), (170200ஏ), (170200பி), (170200சி),

**உடுவில்**

(170043ஏ), (170043பி), (170043சி), (170292ஏ), (172952ஏ), (174815ஏ), (174829ஏ), (174992ஏ), (175045ஏ), (175045பி), (175089ஏ), (175089பி), (175089சி), (175089டி).

## சண்டிலிப்பாய்ப் பகுதிக்கு மின்

அரியாலை, டிசெ. 21
சண்டிலிப்பாய்ச் சந்தியில் இருந்து தொட்டிலடிச் சந்தி வரையிலான பகுதிக்கு மின் வழங்கும் பணி ஆரம்பிக்கப் பட்டுள்ளது.

சண்டிலிப்பாய்ச் சந்தியில் அமைக்கப்பட்ட மின்மாற்றி மூலம் இந்த மின் விநியோகம் வழங்கப்பட்டு வருகின்றன.

[ம—17]

## மகாகணபதி சகஸ்ரநாமம்

பிள்ளையார் பெரும் கதையை முன்னிட்டு சகஸ்ரநாம நூலை எமது தந்தையாரின் ஞாபகார்த்த வெளியீடாக வெளியிட்டுள்ளோன்.

தேவைப்படுவோர்:-
சிவஸ்ரீ மகாதேவக் குருக்கள் சதாசிவசர்மா - மட்டுவில், ராம்கெங்காதரக் குருக்கள், தியாககெங்காதரக் குருக்கள் என்பவர்களிடம் இலவசமாகப் பெற்றுக் கொள்ளலாம்.

தியாக கெங்காதரக் குருக்கள்
[81891] புன்னாலைக்கட்டுவன்.

## நீங்காத நினைவில் முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



### திருமதி சின்னத்துரை சுபத்திரை

உதிப்பு 04 – 05 – 1920
உதிர்வு 02 – 01 – 2000

பெருங்காற்றில் அணையாத அகல்விளக்கே!
கருமேகம் காணாத முழுநிலவே!
வனவேடன் கண்படாத வெண்நிலையே!
யமவேடன் கைபட நான் கண்டிலனே!

நினைவகலாத
ஜெயவீரசிங்கம் (மகன்)
மற்றும் மகன்மார், மருமக்கள்,
பேரர், பூட்டர்.

நாமகள் ஒழுங்கை,
கொக்குவில் கிழக்கு,
கொக்குவில். (81881)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



மண்ணில் ஜனனம் 1935 – 03 – 14
விண்ணில் ஐக்கியம் 2000 – 11 – 21

### அமரர் நரசிங்கம் முத்துகுமாரு

புன்னகை தவழும் பொன்முகமும்
இன்சொல் பேசும் பண்பழகும்
கண்ணியத்துடன் கடமையுணர்வும்
கொண்ட எங்கள் குலவிளக்கே!
அன்பே உருவான உங்களை—இம்
மண்ணுலகில் வாழும்வரை மறப்பதுண்டோ?
மன்றிலாடும் இறைவனின் மலரடி சேர்ந்து
இன்ப வாழ்வில் நிலைத்திடப் பிரார்த்திக்கின்றோம்.

அன்னாரின் மரணச்சடங்கில் கலந்துகொண்டவர்களுக்கும் நேரிலும், தொலைபேசி, தந்தி மூலமும் அனுதாபம் தெரிவித்தவர்களுக்கும் எமது இதயபூர்வ நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

மனைவி, சகோதரர்கள்,
மைத்துனர்கள், மருமக்கள்,
பேரமக்கள்.

தகவல்:
சிவகாமி தர்மபாலா (மருமகள்)
இளவாலை.

11/2, 55 ஆம் ஒழுங்கை,
வெள்ளவத்தை. (81853)

# யாழ்.பல்கலைக்கழகத்துக்கு 12 உதவி விரிவுரையாளர்கள்

யாழ்ப்பாணம்,டிசெ.21

யாழ்பல்கலைக்கழக பீடங்களுக்கு ஒப்பந்த அடிப்படையில் 12 உதவி விரிவுரையாளர்களும் 14 உத்தியோகத்தர்களும் புதிதாக நியமனம் செய்யப்பட்டுள்ளனர்.

தாவரவியலுக்கு உதவி விரிவுரையாளராக செல்வி எம்.கனகசிங்கமும் செய்முறைக் காட்டுநர்களாக செல்விகள் ஜே.துரைஐயா, ஆர். செல்வராஜா மற்றும் ரி.ஜெயசீலன் ஆகியோர் ஒப்பந்த அடிப்படையில் நியமனம் செய்யப்பட்டுள்ளனர்.

இவ்வாறே விலங்கியலுக்கு செல்வி வி.திருநாவுக்கரசு, ஏ.துரைசிங்கராஜா ஆகியோரும்.

இரசாயனவியலுக்கு செல்விகள் எல்.உலாசன், ரி.தர்மகுலசிங்கம், ரி. தங்கராஜா, என்.மோகனதாசன், ஏ. லக்ஸ்மன் ஆகியோரும் -

பௌதிகவியலுக்கு செல்வி ஆர். பத்மநாதன், பி.அருந்தவச்செல்வம் ஆகியோரும் கணிதப் புள்ளி விவரவியலுக்கு செல்வி கே.குணசிங்கம், எம்.கார்த்திகேசு ஆகியோரும் ஒப்பந்த அடிப்படையில் செய்முறை காட்டுநர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர்.

கணிதப் புள்ளிவிவரவியலுக்கு போதனாசிரியர்களாக எஸ்.சுதாநந்தன், பி.மேட்நம், பி.துவாரகன், எம். பாலரூபன், செல்வி எம்.அமரசிங்கம் ஆகியோரும் -

கணனி விஞ்ஞான போதனாசிரியர்களாக எஸ்.முரளீதரன், ஏ.சீவரட்ணம், செல்வி ஜி.சங்கரப்பிள்ளை ஆகியோரும் கணனி அலகிற்கு போதனாசிரியர்களாக எஸ்.தர்மசீலன் மற்றும் செல்வி ஏ.சிவசுப்பிரமணியம் ஆகியோரும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

வவுனியா வளாகத்துக்கு தற்காலிக உதவி விரிவுரையாளராக கணிதமும் புள்ளி விவரவியலும் என்ற பாடத்துக்கு ரி.விக்னேஸ்வரன் நியமிக்கப்பட்டுள்ளார்.

இவர்களுக்கான நியமனக் கடிதங்கள் அனைத்தும் வழங்கப்பட்டுள்ளதாகவும் இவர்கள் தமது பணிகளை பொறுப்பேற்றுள்ளதாகவும் யாழ்.பல்கலைக்கழகப் பதிவாளர் தெரிவித்தார். (ஐ-6)

## லயன்ஸ் சிகிச்சை முகாமில்

# தென்னிந்தியத் திருச்சபை மருத்துவ உதவி வழங்கியது

வசதியற்ற மக்களின் நலன்கருதி இணுவில் மக்லியாட் வைத்தியசாலையில் இடம்பெற்ற இலவச வைத்திய முகாமின் போது நோயாளர்களுக்குத் தேவையான 30 ஆயிரம் ரூபா பெறுமதியான மருந்துகளை யாழ்.தென்னிந்தியத் திருச்சபையினர் வழங்கினர்.

மானிப்பாய் வட்டம், இணுவில், சுன்னாகம் லயன்ஸ் கழகங்கள் தென்னிந்தியத் திருச்சபை யாழ்ப்பாண அத்தியட்சாதீனத்தின் அனுசரணையுடன் இணைந்து இந்த இலவச விசேட வைத்திய முகாமை இணுவில் மக்லியாட் வைத்தியசாலையில் நடத்தின. இதில் 250 இற்கும் மேற்பட்ட நோயாளர்கள் பரிசோதனை செய்யப்பட்டனர்.

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை வைத்திய நிபுணர்களான டாக்டர் திருமதி ஜே.கணேசமூர்த்தி, டாக்டர் கே.சிவசுப்பிரமணியம், டாக்டர் கே.சிவநேசன், டாக்டர் ஜி.பவானி, டாக்டர் கலா சோமசுந்தரம், டாக்டர் என்.ஸ்ரீஸ்கந்தராசா ஆகியோரால் நோயாளர்கள் பரிசோதிக்கப்பட்டனர்.

இப் பரிசோதனை முகாமின்போது தென்னிந்தியத் திருச்சபை யாழ். மாவட்ட அத்தியட்சாதீனத்தின் பேராயர் வண.கலாநிதி எஸ்.ஜெபநேசன், 'லயன்ஸ் கழக பிராந்தியத் தலைவர் லயன் டாக்டர் வீ.தியாகராசா மற்றும் லயன்ஸ் கழகங்களின் தலைவர்கள் பலரும் சமுகமளித்திருந்தனர்.

வைத்திய ஆலோசனைகளுக்கமைய நோயாளர்கள் பாவிக்க வேண்டிய மருந்துகளை தென்னிந்திய திருச்சபையினர் இலவசமாக வழங்கினர்.

லயன்ஸ் கழக சேவை இணைப்பு மாவட்டத் தலைவர் லயன் எஸ்.எஸ். தங்கராஜா மருத்துவ முகாம் ஒழுங்குகளைச் செய்திருந்தார். (ஐ-152)

# கூட்டுறவுப் பணியாளர்களுக்கு ஓய்வூதியம் தரக் கோரிக்கை

கொழும்பு,டிசெ.21

கூட்டுறவுப் பணியாளர்களை ஓய்வூதியத் திட்டத்தில் சேர்த்துக் கொள்ள வேண்டும் என்று மட்டக்களப்பு மாவட்ட கூட்டுறவுச் சங்க சம்மேளனம் கோரிக்கை விடுத்துள்ளது.

கூட்டுறவுத்துறை ஊழியர்கள் மிகக் குறைந்த ஊதியத்துடன் தற்போது பணியாற்றி வருகின்றனர்.

அரசாங்கத் துறையில் அனைத்துத் துறையைச் சேர்ந்தவர்களும் ஓய்வூதியத்தில் இணைக்கப்பட்டுள்ளனர். ஆனால் கூட்டுறவுத்துறையைச் சேர்ந்த பணியாளர்கள் நீண்டகாலம் பணியாற்றி பின்னர் குறிப்பிட்டதொரு தொகைப்பணத்தை மாத்திரம் பெற்று ஓய்வுபெறும் நிலையே காணப்படுகிறது.

இதனால் அவர்கள் எதிர்காலத்தில் மிகவும் இக்கட்டான நிலையில் கஷ்டப்பட்டு வாழ்ந்து வருகின்றனர்.

எனவே கூட்டுறவுத்துறை ஊழியர்களை மாதாந்த ஓய்வூதியத் திட்டத்தில் சேர்க்க அரசாங்கம் முன்வர வேண்டும் என்று மேற்படி சம்மேளனத்தால் கோரப்பட்டுள்ளது. (ஐ-17)



வடமராட்சிப் பிரதேசத்திலுள்ள பாடசாலைகளில் 5 ஆம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களுக்கு பருத்தித்துறை இம்பர்சிட்டி ஞானியார் கல்விக் கழகம் பாராட்டு விழா ஒன்றை வடமராட்சி இந்து மகளிர் கல்லூரியில் அண்மையில் நடத்தியது.

சித்தியடைந்த மாணவர்களில் ஒருவரான செல்வி சுவிந்தி நவரத்தினராசாவுக்கு மந்திகை அரசினர் ஆதார வைத்தியசாலையில் பணிபுரியும் பிரெஞ்சு மருத்துவக் குழு டாக்டர் அன்றியா றியேஸ் பரிசு வழங்கியபோது எடுக்கப்பட்ட படம். *(படம் ; வடமராட்சி பிரதேச செய்தியாளர்)*

# அச்சுவேலிப்பகுதி வழக்குகள் இனி மல்லாகம் நீதிமன்றில்

அச்சுவேலி பொலீஸ் நிலைய எல்லைக்கு உட்பட்ட வழக்குகள் யாவும் அடுத்த ஆண்டு முதல் மல்லாகம் மாவட்ட நீதிமன்றிலேயே ஏற்றுக்கொள்ளப்படும் என்று தெரிவிக்கப்படுகின்றது.

மல்லாகம் மாவட்ட நீதிமன்ற சட்டத்தரணிகள் சங்கம் ஆரம்பகால நடைமுறையை சுட்டிக்காட்டி கேட்டுக் கொண்டமைக்கு இணங்கவே இதற்கான அனுமதியை பிரதம நீதியரசர் வழங்கி உள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

குடாநாட்டில் சிவில் நிர்வாகம் சீர் குலைவதற்கு முன்னர் அச்சுவேலிப்பகுதியில் பொலீஸ் நிலையம் இருக்கவில்லை. காங்கேசன்துறைப் பொலீஸ் பகுதிக்குள்ளேயே இப்பகுதியும் உள்ளடக்கப்பட்டிருந்தது. தற்போது அச்சுவேலியில் புதிய பொலீஸ் நிலையம் அமைக்கப்பட்டுள்ளது. இந்தப் பொலீஸ் நிலையத்தில் பதிவு செய்யப்படும் முறைப்பாடுகள் தொடர்பான வழக்குகள் யாழ்.நீதிமன்றிலேயே தாக்கல் செய்யப்பட்டு வருகின்றன. இதனால் அப்பகுதி மக்களுக்கு பல்வேறு சிரமங்கள் ஏற்படுவதாகத் தெரிவிக்கப்பட்டது.

இதனை அடுத்து முன்னர் இருந்தது போன்று தற்போது அச்சுவேலி பொலீஸ் நிலையத்திற்கு உட்பட்ட பகுதிகளைச் சேர்ந்த வழக்குகளையும் மல்லாகம் நீதிமன்றில் தாக்கல் செய்ய வேண்டும் என்று சட்டத்தரணிகள் சங்கம் கோரியிருந்தது. (ம-86)

## நூல் அறிமுக விழா

யாழ்ப்பாணம்,டிசெ.21

'அருட்கவி' சீ.விநாசித்தம்பிப் புலவர் எழுதிய 'கந்தபுராண வசன காவியம்' நூல் அறிமுக விழா, நாளை மறுதினம் சனிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு, சித்தன்கேணி ஸ்ரீ மகா கணபதிப் பிள்ளையார் கோயில் மண்டபத்தில் நடைபெறும்.

ஆலய பரிபாலன சபைத் தலைவர் மு.பத்மநாதன் தலைமையில் நடைபெறும் இந்த விழாவில் பிரதம விருந்தினர்களாக முன்னாள் மாவட்ட நீதிவானும், பதில் நீதிவானுமான மு.திருநாவுக்கரசு, யாழ். பல்கலைக்கழக இந்து நாகரிகத் துறைத் தலைவர் திருமதி நாச்சியார் செல்வநாயகம், வலிகாமம் மேற்குப் பிரதேச செயலர் நா.வேதநாயகம் ஆகியோரும், சிறப்பு விருந்தினர்களாக இந்துசமயப் பேரவை செயலாளர் சி.சக்திகிரீவன், யாழ்.பல்கலைக்கழக மார்ஷல் ஐ.கோ.சந்திரசேகரம் மதுரகவி காரை எம்.பி.அருளானந்தம் ஆகியோரும் கலந்து கொள்வர்.

# இளைஞர்களே திரண்டு வாருங்கள்! 'ராகிங்' கொடூரத்தை நிறுத்துவோம்!!

## ஆன்மீக நிகழ்வில் பல்கலைக்கழக மாணவன் அழைப்பு

யாழ்ப்பாணம்,டிசெ.21

மனிதனை மனிதனாக வாழச் செய்ய வேண்டும். அதற்காக யாழ். பல்கலைக்கழகத்தில் நடைபெறும் 'ராகிங்' கொடூரத்தை நிறுத்துவதற்கு அனைவரும் உதவவேண்டும்.

இவ்வாறு யாழ்.பல்கலைக்கழகத்தில் நடைபெற்ற அன்னை ஸ்ரீ சாரதாதேவி அம்மையாரின் ஜெயந்தி தின வைபவத்தில் உரையாற்றிய யாழ் பல்கலைக்கழக விஞ்ஞானபீட மாணவன் ரி.சத்தியேந்திரா அழைப்பு விடுத்துள்ளார். ஆன்மீகத்தில் நாட்டமுள்ள பல்கலைக்கழக மாணவர்களினால் ஏற்பாடு செய்யப்பட்ட இந் நிகழ்வில் நூற்றுக்கணக்கானோர் கலந்து கொண்டனர்.

இந்த நிகழ்வில் அவர் மேலும் கூறியதாவது:-

இந்தப் பட்டப்பகலில் தெட்டத் தெளிவாகவும் வெளிச்சமாகவும் யான் உங்களுக்கு ஒன்றைக் கூறிக்கொள்ள விரும்புகிறேன். குறிப்பெடுத்துக் கொள்ளுங்கள்.

'நூறு ஆன்மீக இளைஞர்கள் வாருங்கள், புதிய இந்தியாவை உருவாக்குவோம்!' என்று சுவாமி விவேகானந்தர் அழைப்பு விடுத்தார். நான் அறைகூவல் விடுக்கிறேன் "15 ஆன்மீக மாணவர்கள் வாருங்கள். யாழ்.பல்கலைக்கழகத்தில் நடைபெறும் ராகிங் கொடூரத்தை நிறுத்துவோம்."

அன்னை போன்ற பெண்களைக் கேவலப்படுத்துவதும், ஆண் சிங்கங்களை கோழைகள் ஆக்குவதும் - ஏன் இருதரப்பினரையுமே பாலியல் வதைக்கு உள்ளாக்குவதுமான இந்த 'ராகிங்குக்கு' நான் சாவுமணி அடிக்கிறேன். இது சத்தியம்.

இது எனது சொந்தக் கருத்து. எவரும் எனக்குப் பின்னணியில் இல்லை. இதற்காக எந்தத் தரப்பில் இருந்து எவ் வகையான சவால்கள் வந்தாலும் முகம் கொடுக்கத் தயாராகவுள்ளேன். இந்தப் பல்கலைக்கழகத்தில் படித்த புத்திஜீவிகளாலும் ஏற்றுக் கொள்ளப்படும் 'ராகிங்கை' பாரம்பரியத்தை இல்லாமல் செய்வோம்.

யாழ்.பல்கலைக்கழகத்தில் ஒழுக்கம் என்றால் கிலோ என்ன விலை என்று கேட்கும் நிலை வந்துவிட்டது. இதை யாரும் மறைக்கவோ, மறுக்கவோ முடியாது.

பத்திரிகைகளில் படித்திருப்பீர்கள், வானொலியில் கேட்டிருப்பீர்கள், நேற்றுக்கூட ஒரு மாணவன் கொடுமையாகத் தாக்கப்பட்டு ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார். இதனைத் தட்டிக் கேட்பதற்கு எவரும் இல்லை. பெற்ற பிள்ளைகளை கற்பதற்கு பல்கலைக்கழகம் விடுவதற்கு பெற்றோர்கள் அஞ்சுகின்றார்கள். சமயம் என்றால் என்ன? மனிதனை மனிதனாக வாழவைப்பதே சமயம். முடிந்தால் தெய்வத்தன்மையை உணரச் செய்யுங்கள். அது எல்லோராலும் முடியாது.

### மதம் மாற்றுவது பாவம்

ஒவ்வொரு மனிதனுக்கும் தாம் விரும்பிய மதத்தினைப் பின்பற்றுவதற்கு உரிமை உண்டு. அது போல் அவன் விரும்பிய சமயத்துக்கு மாறவும் உரிமை உண்டு. ஒருவனது ஏழ்மை நிலையைப் பயன்படுத்தி அவனை மதம் மாற்றுவது மிகவும் கொடிய பாவச் செயலாகும்.

இதற்குக் காரணம் மாறும் மனிதனின் மதம் அல்ல; மாற்றும் மனிதனின் மதத்தவரே. ஏனெனில் மாறும் மனிதனின் மதத்தவர்கள் அவனது ஏழ்மை நிலையைப் புரிந்துகொண்டு அவனுக்கு உதவுவதில்லை.

புதிய புதிய ஆலயங்கள் அமைப்பதும் அபிஷேகங்கள் செய்வதும் மக்களின் ஏழ்மை நிலையை ஒரு போதும் தீர்க்கமாட்டாது. எமது மக்கள் இன்று சொல்லொணாத் துயரங்களையும், துன்பங்களையும் அனுபவித்துக் கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்கு ஒரு நிரந்தரமான, நிம்மதியான, சுதந்திரமான, சுபீட்சமான வாழ்வு அமைய வேண்டும்.

இப்படி அவர் மேலும் கூறினார்.

சுவாமி விவேகானந்தரின் வாழ்க்கை நெறிபற்றி எஸ்.சத்தியகுமார் உரையாற்றும் போது கூறியதாவது:-

"அறிவில் நிமிருங்கள், அன்பில் நெகிழுங்கள், உழைப்பால் உயருங்கள்" இந்த மூன்று வரிகளுக்குள் விவேகானந்தர் சொன்னவற்றை அடக்கப் பார்க்க வேண்டும்.

இந்த உலகத்தில் மானிடராகப் பிறவி எடுக்கின்ற ஒவ்வொருவரும் மானிட இயல்புகளைக் கொண்டு விளங்குவதில்லை.

மனித இயல்புகள் எல்லாம் பொருந்தி இருக்கும்போதுதான் அவன் நிறைவான மனிதனாக விளங்குகின்றான்.

இவ்வாறு மனித தன்மைகளை மட்டும் நிறைந்த ஒருவராகத் திகழ்ந்தவர்தான் தற்காலத்தில் சுவாமி விவேகானந்தர் என்று எம்மால் அறியப்பட்ட நரேந்திரர்.

சன்னியாசியாக இருந்துகொண்டு மக்களுக்கு அவர் என்ன சொன்னார் என்பதை நாம் புரிந்து கொண்டோமா?

விவேகானந்தர் வாழ்ந்த அந்தக் காலப்பகுதி இந்திய நாடு அந்நிய ஆதிக்கத்தின் கோரப்பிடிக்குள் சிக்கியிருந்த காலம். இந்திய மண்ணும், மக்களும் விடுதலை அடைய வேண்டும் என்ற எண்ணம் கொண்டிருந்த காலகட்டம்.

அகவிடுதலையோடு புறவிடுதலையும் அடைய வேண்டும் என்று அவர் சிந்தித்தார். அதற்காகவே அவர் உழைத்தார்.

அன்று அவருடைய நாட்டுக்கு விடுதலை தேவைப்பட்டது. அதற்கான கருத்துக்களை அவர் சொல்வதற்கு சன்னியாசியானார்; ஆன்மீக வாழ்க்கை வாழ்ந்தார்.

இன்று எமது நாட்டிற்கு எங்களைப்போன்ற இளைஞர் யுவதிகளால என்ன செய்ய முடியும்? எதற்காக நாங்கள் ஆன்மீக விழாக்களை நடத்த வேண்டும்? பேச வேண்டும்?

'நீங்கள் தவம் இருங்கள், சன்னியாசியாகிப் போங்கள்' என்று சொல்வதற்கல்ல. உங்களுடைய தவம், உங்களுடைய ஆன்மீகம் 'ஒழுக்கமாக வாழுங்கள்' என்றுதான் இருக்க வேண்டும்.

ஒழுக்கம் இந்தப் பல்கலைக் கழகத்தில் கெட்டுப்போகின்றது. நாங்கள் இன்று அடிக்கடி பத்திரிகைகளிலே வாசிக்கின்றோம். அந்த ஒழுக்கத்தை தியானத்தின் மூலம் பெறலாம் என்று விவேகானந்தர் சுட்டிக்காட்டியுள்ளார்; செய்து காட்டினார்.

நாங்கள் யாருமே, நாம் யார் என்பதை அறியவில்லை, ஏன் இந்த யாழ்ப்பாணத்தில் பிறந்திருக்கிறோம், வாழ்கிறோம், பல்கலைக்கழகத்தில் படிக்கிறோம், வீதியில் திரிகிறோம், ஆமிக்குப் பயந்து வாழ்கிறோம் என்று இன்னும் தான் எமக்கு விளங்கவில்லை. அதை விளங்குவதற்கான இலகுவான வழியைச் சொன்னவர் தான் விவேகானந்தர்.

நாங்கள் பெண்களை இம்சிப்பதை, - இந்தப் பல்கலைக்கழகத்தில் பகிடிவதை என்று சொல்லிப் பெண்களை இம்சிப்பதை - தவிர்த்துக் கொள்ளப்பழக வேண்டும். அப்பொழுதுதான் எம்மை ஒழுக்கமுள்ளவர்களாக இனம் காட்டிக்கொள்ள முடியும்.

யாழ்.பல்கலைக்கழகத்திலே நடக்கின்ற சேஷ்டைகள் பற்றி வெளியிலே எத்தனையோ விதமாகப் பேசப்படுகிறது.

பல்கலைக்கழகத்துக்கு பெண்களை அனுப்புவதற்குப் பயப்படுகிறார்கள். அந்தப் படிப்பைவிட்டு வேறு படிப்பு மேற்கொள்வதற்கு ஆசைப்படுகிறார்கள்.

இன்று யாழ்.நகருக்குள் விலைமாதர்களைப் பிடிக்கலாம் என்று தகவல்கள் தெரிவிக்கின்றன.

இப்படி ஒரு நிலை எப்படி வந்தது? பாலியல் கல்வியைப் பற்றிக் கதைகக் கூடாது என்று மூடிவைத்திருந்தும் எப்படியோ பிரச்சினை பூதாகாரமாகிவிட்டது. ஏன்? - இவ்வாறு தெரிவித்தார் சத்தியகுமார்.

பல்கலைக்கழக கலைப்பீட மாணவி எஸ்.மகிந்தினி, செல்வி எஸ்.பங்கையற்செல்வி ஆகியோரும் உரையாற்றினர். (ஐ-5)

## பாற்பொருள்கள் உற்பத்தி செய்யப்படுகின்றன

வலி.தெற்கு,டிசெ.21

வலிகாமம் வடக்கு பிரதேசசபையினரால் வழங்கப்பட்ட 75 ஆயிரம் ரூபா பெறுமதியான ஜெனரேட்டரின் உதவியுடன் தெல்லிப்பழை கால்நடை வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கத்தினர் பாற்பொருள்களை உற்பத்தி செய்யத் தொடங்கியுள்ளனர்.

ஐஸ்கிறீம், ஜோக்கட், சர்பத் போன்ற பொருள்கள் இங்கு உற்பத்தி செய்யப்படுவதுடன் அண்மையில் ஆரம்பிக்கப்பட்ட விற்பனை நிலையத்தின் மூலம் இவை விற்பனை செய்யப்பட்டும் வருகின்றன. (ம-152)

# கிழக்கில் பிஸ்ரல் குழுவினரின் தாக்குதல்கள் அதிகரிக்கின்றன

மட்டக்களப்பு,டிசெ.21

கிழக்கு மாகாணத்தில் பிஸ்ரல் குழுக்களின் தாக்குதல்கள் அதிகரித்து வருவதாக படைத்தரப்புத் தெரிவித்துள்ளது.

நேற்று முன்தினம் மட்டும் இரு சம்பவங்கள் இடம்பெற்றுள்ளன என்றும் -

அவை பிஸ்ரல் குழுவின் கைவரிசையே என்றும் -

மேலும் தெரிவிக்கப்பட்டது.

மட்டக்களப்பு நகரில் கள்ளியங்காட்டுச் சந்தியில் நேற்று முன்தினம் முற்பகல் 11.30 மணியளவில் ஜயாத்துரை ஜெகன் என்பவர் சுட்டுக் கொல்லப்பட்டார்.

இவர் படையினருடன் இணைந்து செயற்படுபவர் என்று தெரிவிக்கப்பட்டது.

கல்முனையில் நேற்று முன்தினம் பிற்பகல் கல்முனைப் பொலீஸ் நிலையத்தைச் சேர்ந்த ஊர்காவலரான ரஹீம் (வயது43) என்பவர் சுட்டுக் கொல்லப்பட்டார்.

பொலீஸ் நிலையத்தில் இருந்து வீடு திரும்பிக் கொண்டிருக்கையிலேயே அவர் சுடப்பட்டார்.

(ம-14-21-3-7-8)

## இலங்கை இனப்பிரச்சினை

# இலங்கைக்கான நோர்வே தூதர் பாரிஸ் புறப்பாடு

கொழும்பு,டிசெ.21

இலங்கைக்கான நோர்வேத் தூதர் பாரிஸ்"க்குச் சென்றுள்ளார்.

இலங்கை அரசுக்கும் விடுதலைப்புலிகளுக்கும் இடையிலான சமாதானப் பேச்சுக்களை ஏற்படுத்துவதற்கான ஒழுங்குகளைத் தீவிரப்படுத்துவதற்காகவே அவர் பாரிஸ் சென்றுள்ளார் என கொழும்பு நோர்வே தூதரகப் பேச்சாளர் தெரிவித்தார்.

பாரிஸ் சென்றுள்ள அவர் அங்கு பல முக்கியஸ்தர்களுடன் இலங்கை விவகாரம் குறித்துப் பேச்சு நடதுவார் எனவும் பேச்சாளர் தெரிவித்தார். (இ-8)

## அதிகாரசபை ஆலோசகர் யாழ்.விஜயம்

வடக்கின் மீள் குடியமர்வு புனர்வாழ்வு புனரமைப்பு அதிகாரசபையின் ஆலோசகரான எஸ்.சுந்தரலிங்கம் யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்யவுள்ளார்.

புனர்வாழ்வு அதிகார சபையின் வேலைத்திட்டங்களுடன் குருநகரிலுள்ள சீ-நோர் வலைத் தொழிற்சாலையையும் அவர் பார்வையிடவுள்ளார். (இ-5)

# மன்னாரில் தாக்குதல்!

மன்னார் நகரப் பகுதியில் வைத்து நேற்று முன்தினம் முற்பகல் 11.10 மணியளவில் கிளர்ச்சித் தடுப்புப் பிரிவைச் சேர்ந்த பொலீஸார் மீது தாக்குதல் நடத்தப் பட்டதில் பொலீஸார் ஒருவர் உயிரிழந்தார். மற்றொருவர் காயமடைந்தார்.

மேற்படி தாக்குதல் சம்பவத்தை அடுத்து நகரப் பகுதியைச் சுற்றி வளைத்த படையினர் வீடு வீடாகத் தேடுதல் நடத்தியதுடன்,சந்தேகத்தின் பேரில் 5 இளைஞர்களைக் கைது செய்தனர் என மன்னார்ச் செய்திகள் தெரிவிக்கின்றன. (இ-7-8-164)

# தரம்-I அதிபர்கள் தீர்வையின்றி கார் கொள்வனவு செய்ய வசதி

யாழ்ப்பாணம்,டிசெ.21

இலங்கை அதிபர் சேவையின் தரம் I இல் பணியாற்றுபவர்கள் தீர்வை அற்ற முறையில் கார் கொள்வனவு செய்வதற்கு வசதி செய்யப்பட்டுள்ளது.

இலங்கைத் திறைசேரியின் 866 ஆம் இலக்க 22-2-1999ஆம் திகதிய சுற்றறிக்கையின்படியும், கல்வி உயர் கல்வி அமைச்சின் 1999-38ஆம் இலக்க சுற்றறிக்கையின் படியும் இதற்கான வசதிகள் செய்து கொடுக்கப்பட்டுள்ளதாகவும் -

மேற்படி கார் கொள்வனவுக்கு விண்ணப்பிக்க விரும்புவோர் அது தொடர்பான மாதிரி விண்ணப்பப் படிவத்தை வடமாகாண அதிபர் சங்கத்தலைவர் க.இராசதுரையிடம் பெற்றுக்கொள்ளலாம் என்றும் தெரிவிக்கப்பட்டது. (ஐ-7)

# இருபாலை கிழக்கு மக்கள் மீளக்குடியமர அனுமதி

கோப்பாய்ப் பிரதேச செயலர் பிரிவில் இருபாலை கிழக்கு (ஜே-258) கிராமசேவையாளர் பிரிவில் மக்கள் மீளக் குடியமர அனுமதிக்கப்படவிருக்கின்றனர்.

இந்தப் பிரதேச மக்கள் விடுத்த கோரிக்கையை அடுத்து யாழ்மாவட்ட ஈ.பி.டி.பி.நாடாளுமன்ற உறுப்பினர் கே.வி.குகேந்திரன் பலாலி இராணுவத் தலைமையக அதிகாரியுடன் நடத்திய பேச்சுக்களை அடுத்து இதற்கான அனுமதி வழங்கப்பட்டுள்ளதாக ஈ.பி.டி.பி. வட்டாரங்கள் தெரிவித்தன.

அடுத்தமாதம் முதலாம் திகதி முதல் அவர்கள் மீளக் குடியமர முடியும் எனத் தெரிவிக்கப்பட்டது.

## தீவகக் கல்வி வலயம்

### தரம் 8, 11 இற்கான ஆசிரிய செயலமர்வு

| பாடம் | திகதி (டிசெம்பர்) |
|---|---|
| தமிழ் | 23, 24 |
| ஆங்கிலம் | 27, 28 |
| கணிதம் | 26, 27, 28 |
| விஞ்ஞானம் | 26, 27, 28 |
| சமூகக்கல்வியும் வரலாறும் | 26, 27, 28, 29, 30 |

★ செயலமர்வில் பங்குபற்றும் ஆசிரியர்கள் மதிய உணவு கொண்டு வருதல் வேண்டும்.

★ பாடங்களுக்குரிய செயலமர்வு யா/யாழ் மத்திய கல்லூரியில் நடைபெறும்.

★ 2001 ஆம் ஆண்டில் மேற்படி தரங்களில் கற்பிக்கவுள்ள ஆசிரியர்கள் இச்செயலமர்வில் தவறாது பங்குபற்றவும்.

**வலயக் கல்விப் பணிப்பாளர்,**
**தீவகம்.**

(81865)

## அதிபர் சேவை தரம் I க்கு நேர்முகப்பரீட்சை

1991 ஆம் ஆண்டு இலங்கை அதிபர் சேவையின் தரம் 11 க்குத் தெரிவு செய்யப்பட்டுத் தற்பொழுது அதிபர் சேவை தரம் 1 க்கான நேர்முகப் பரீட்சைக்கு யாழ்ப்பாணத்தில் இருந்து அழைக்கப்பட்டவர்களுக்கான நேர்முகப் பரீட்சை யாழ்ப்பாணத்தில் நடத்தப்படவுள்ளது. இது தொடர்பான மேலதிக நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக சம்பந்தப்பட்ட அதிபர்கள் தமது விவரங்களை வடமாகாண அதிபர் சங்கத் தலைவரும், யாழ். மத்திய கல்லூரி அதிபருமான க.இராசதுரையிடமோ அல்லது சங்கச் செயலாளரும், வசாவிளான் மத்திய மகா வித்தியாலய அதிபருமான சி.நடராசாவிடமோ நாளை வெள்ளிக்கிழமைக்கு முன்னர் சமர்ப்பிக்க வேண்டுமென கேட்கப்பட்டுள்ளது. (இ-7)

## கட்டுநாயக்க விமானநிலையத்தில் பாதுகாப்பு தீவிரம்

கொழும்பு,டிசெ.21

கட்டுநாயக்க விமான நிலையத்தில் பாதுகாப்பு நடவடிக்கைகள் பலப்படுத்தப்பட்டுள்ளன என பொலஸ்மா அதிபர் லக்கி கொடித் துவக்கு தெரிவித்தார்.

விடுதலைப்புலிகள் அமைப்பைச் சேர்ந்த சுதாகரன் என்ற தற்கொலைக் குண்டுதாரி விமானம் மூலம் இந்தியா சென்றுள்ளார் என்றும்-

சமீப காலமாக பிரஸ்தாப நபரின் நடவடிக்கைகள் கொழும்பி லும் புறநகர்ப் பகுதிகளிலும் அதிகரித்துள்ளன, என்றும்- அத்துடன் சர்வதேச விமான நிலையம் ஊடாக வெளிநாடுகளுக்கும் அவர் சுயாதீனமாகச் செல்கின்றார் என்றும்- பொலீஸ் புலனாய்வுத் தகவல்கள் தெரிவிப்பதாகவும் அவர் கூறினார்.

கொழும்பு புறநகர்ப்பகுதிகளில் வெடிபொருள்களைப் பதுக்கி வைத்து தாக்குதல் நடத்தும் புலிகளின் திட்டம் ஒன்று அம்பலமாகியுள்ளது என்றும் அவர் கூறினார். (இ-8)

## கொழும்பில் பாதயாத்திரை

நோர்வேயின் சமாதான முயற்சிகள் வெற்றிபெற வேண்டுமெனக் கோரி கொழும்பில் நேற்று முன்தினம் பாதயாத்திரை ஒன்று நடத்தப்பட்டது.

சர்வோதய இயக்கமும்,தேசிய ஒற்றுமைக்கான சமய அமைப்பும் இணைந்து இந்தப் பாதயாத்திரையை ஒழுங்கு செய்திருந்தன.

கொழும்பு மகாவலி கேந்திர நிலையத்தில் இருந்து ஆரம்பமான இந்தப் பாதயாத்திரை விகாரமாதேவி பூங்காவில் இடம்பெற்ற சமயப் பிரார்த்தனையுடன் முடிவடைந்தது.

நூற்றுக்கும் அதிகமான பொது மக்களும்,சமயத் தலைவர்களும் இந்தப் பாதயாத்திரையில் கலந்து கொண்டனர். (இ-7)

## புலிகள் தரப்பில் உயிரிழந்த மூவர்

வவுனியா,டிசெ.21

நுணாவில் மற்றும் கிளாலிப் பகுதிகளில் கடந்த 16 ஆம்,17 ஆம் திகதிகளில் இடம்பெற்ற மோதல் சம்பவங்களின போது தமது தரப்பில் உயிரிழந்த 3 பேரின் பெயர் விவரங்களை விடுதலைப் புலிகள் அறிவித்துள்ளனர்.

அவர்களின் விவரம் வருமாறு:-

★ வான்மதி (யோகநாதன் ரேணுகா-கனகராயன்குளம்)

★ மதுவிழி (சுப்பிரமணியம் குமுதினி-வவுனியா)

★ 2 ஆம் லெப்.புரட்சி (பால்ராஜ் வசுமதி- கிளிநொச்சி)

(இ-7-164)

## தொலைபேசி வசதி

ஸ்ரான்லி வீதி ஒழுங்கை மணியம்ஸ் கட்டடத்தில் இயங்கும் வடக்கின் மீள் குடியமர்வு அதிகார சபையன் அலுவலகத்துக்கு தொலைபேசி மற்றும் பக்ஸ் வசதிகள் செய்யப்பட்டுள்ளன. (ம-5)

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



தாயின் மடியில் 25 - 07 - 1950

இறைவன் அடியில் 14 - 12 - 1999

அமரர்

**கணபதிப்பிள்ளை கிருஷ்ணமூர்த்தி**

திதி 21-12-2000

ஆண்டு ஒன்று சென்றும்
அழியவில்லை உம் சோகம்!

உங்கள் பிரிவால் துயருறும்
**குடும்பத்தினர்.**

*கைதடி கிழக்கு,*
*கைதடி.*

(81877)

# ஈராண்டினில் ஈரம் சுரக்கும் நினைவஞ்சலி



மலர்வு 09 - 10 - 1939

மறைவு 13 - 01 - 1999

திருமதி

**இரஞ்சிதபூரணி கோபாலகிருஷ்ணன்**

(இளைப்பாறிய அந்தரங்கக் காரியதரிசி, மக்கள் வங்கி பிராந்திய தலைமைக் காரியாலயம், யாழ்ப்பாணம்.)

திதி: 21-12-2000

இமைப் பொழுதும் எம் நெஞ்சில்
நின்றும் நீங்காத நினைவலைகளை
என்றும் சுமந்து நிற்கின்றோம் அம்மாவே!

*51/7, செட்டித் தெரு,*
*நல்லூர்,*
*யாழ்ப்பாணம்.*

**கணவர், மகன்,**
**சகோதரர்கள்.**

(81802)

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



பிறப்பு 1930 - 06 - 13

இறப்பு 2000 - 01 - 03

**அமரர் வயிரவன் ஐயம்பிள்ளை**

21-12-2000

அன்பின் தெய்வமாய், பாசத்தின் உறைவிடமாய்
குடும்பத்தின் ஒளிவிளக்காய் வாழ்ந்து, எம்மை
விட்டுப்பிரிந்து ஓராண்டு சென்றாலும், உங்கள்
நினைவுகள் எம் மனதைவிட்டு என்றும் மாறாதையா!
உங்கள் ஆன்மாவின் சாந்திக்காகப் பலமுறை
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**மனைவி, பிள்ளைகள்,**
**சகோதரர்கள், மருமக்கள்,**
**பேரப்பிள்ளைகள்.**

*6 ஆம் வட்டாரம்,*
*அனலைதீவு மேற்கு,*
*அனலைதீவு.*

(81803)

# 31 ஆம் நாள் நினைவலைகள்

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்

மண்ணில்
17
-
09
-
1921



விண்ணில்
22
-
11
-
2000

## சோகம் சுமக்க வைத்த....

## "ஒரு மனிதத்தின் பயணம்"

## அமரர் அருணாசலம் ஆறுமுகம் அவர்கள்

(சமாதான நீதிவான் - முன்னாள் உப அதிபர், சாவகச்சேரி இந்து ஆரம்ப பாடசாலை)

பொன்பதித்த பூவுடலம் எங்கே ஐயா?
புன்னகைகொள் திருவதனம் எங்கே ஐயா?
கன்னலொடு சர்க்கரையும் தேனும் கொஞ்சும்
கதையழகுக் காவியமே எங்கே ஐயா?
மின்னலெனுங் கண்களிலே கருணை தேக்கி
மேவரிய ஊருறவுக் காக்கம் நல்கி
பன்னரிய சேவைசெய்த பாசத் தந்தாய்!
பதறுகிறோம்! பறந்ததெங்கே? வாருமையா!

✦ ✣ ✦ ✣ ✦

ஆறுமுகத் தையாவும் அன்பு வாழும்!
ஆசானா யாற்றிநின்ற பணிகள் வாழும்!
கூறுசமா தானநீதி வானாய் நின்று
குவலயத்தில் செய்தபணி நின்றே வெல்லும்!
ஊறுசெயுந் துயராலே உறக்கம் நீங்கி
உம்நினைவால் பிரிவாற்றா திங்கு வாடி
ஆறுமுகத் தண்ணலவன் அருளிற் றோய்ந்து
அவனடிக்கீழ் நீசுகிக்க அஞ்சலித்தோம்....!

நாளை (22.12.2000) வெள்ளிக்கிழமை எங்கள் இல்லத்தில் நடைபெறும் கிரியைகளிலும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ள அன்புடன் அழைக்கின்றோம்.

*கப்புதூ,*
*கரவெட்டி.*

- குடும்பத்தினர்,
*தாமோதரம் வீதி, சாவகச்சேரி.*

(C/14325)

## சின்னஞ்சிறு விளம்பரம்

### புறொயிலர் கோழி விற்பனைக்கு

கொழும்பிலிருந்து விமானம் மூலம் தருவிக்கப்பட்ட சுத்தம் செய்த புறொயிலர் இறைச்சிக் கோழி தினமும் பெற்றுக் கொள்ளலாம். தொடர்பு: T.கரன், ஆஸ்பத்திரி வீதி, கஸ்தூரியார் வீதிச் சந்திக் கடை, யாழ்ப்பாணம். (81880)

### அபூர்வ ஜோதிடம்

ரிஷிகளின் ஏடுகள் மூலம் தீராத நோய் அவஸ்தைக்கு உடனடி விடுதலையும் வாழ்க்கையில் குஷியாக இருத்தலும், கிரக தோஷ பீடிப்புக்கு சிறப்பு நிவாரணம். தொடர்பு: ஆடியபாதம் வீதி, சரஸ்வதி மில் லேன், கொக்குவில் கிழக்கு. தினமும் 8.30-5.00 மணி. (81883)

### மணமகள் தேவை

டோகா நாட்டில் உதவி நில அளவையாளராகத் தொழில் புரியும் 32 வயதுடைய றோமன்கத்தோலிக்க கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த அழகிய மணமகனுக்கு மணப்பெண் தேவை. வெளிநாட்டில் வசிக்கும பெண்களும் விண்ணப்பிக்கலாம். தொடர்பு: விள. இல.1163 மே/பா உதயன். (81878)

### MATHS PERSONAL CLASSES

தரம் 6 முதல் **O/L** வரையான மாணவர்களுக்கு கணிதம் வீடுகளுக்குச் சென்று கற்பிக்கப்படும். முதல் தொடர்பு கொள்ளும் 10 பேருக்கு மட்டும் அனுமதி. தொடர்பு: பா.கிருபாகரன் **[SP.Trd.Maths B.A.]** சம்பியன் லேன், கொக்குவில் **(K.K.S.** வீதிக்கு பக்கத்தில இருந்து 3ஆம் வீடு). (81873)

### விற்பனைக்கு

வீட்டுத் தளபாடங்கள், மின்சாதனப் பொருள்கள் என்பன விற்பனைக்கு உண்டு. (பழைய) பிள்ளைகள் இல்லம், சங்கரப்பிள்ளை வீதி, மானிப்பாய். (81862)

சிங்கர் (இரண்டு கதவு) குளிர் சாதனப் பெட்டி, நசனல் வோஷிங் மெசின் என்பன விற்பனைக்கு உண்டு. பார்வையிடும் நேரம் **1.30p.m-5.30 p.m.** ஞாயிறு **3.p.m.-5.30.pm.** தொடர்பு: **N.**பத்மதேவா, சுதுமலைச் சந்தி, யாழ்.வீதி, மானிப்பாய். (81864)

### தவறிவிட்டது

29, செண்பற்றிக்ஸ் றோட், யாழ்ப்பாணம் என்ற முகவரியைச் சேர்ந்த க.மாணிக்கம் என்பவருடைய தேசிய அடையாள அட்டையும் (இல. 253021390V) விசேட அடையாள அட்டையும் பிரதான வீதிக்கும் செண்பற்றிக்ஸ் வீதிக்கும் இடையில் 14-12-2000 அன்று தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் மேற்படி விலாசத்தில் தயவு செய்து ஒப்படைத்து உதவவும். (81879)

தோப்பு, அச்சுவேலி எனும் முகவரியுடைய பாலசிங்கம் உமா தேவி என்பவருடைய தேசிய அ.அ. (627161395**V**), விசேட அ.அ. (இல. 0903015241), அலுவலக அடையாள அட்டை என்பன யாழ் பொஸ்கோ புத்தகசாலைக்கு முன்பாகத் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து விநோ நகைப்பூங்கா, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம் எனும் முகவரியில் ஒப்படைத்து உதவவும். சன்மானம் வழங்கப்படும். (81882)

# மருந்துகளின் விற்பனை விலை தொடர்பாக சுகாதாரப் பணிமனையில் கலந்துரையாடல்

## புதிய விலைக் கட்டுப்பாடு ஜனவரியில் அமுலுக்கு

யாழ்ப்பாணம்,டிசெ.21

மருந்துகளை கொள்வனவு விலையிலிருந்து 15 சதவீதத்துக்கு மேற்படாது விற்பனை செய்ய வேண்டும் என்று யாழ்.குடாநாட்டில் உள்ள சில்லறை மருந்து விற்பனையாளர்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

யாழ்.குடாநாட்டில் மருந்துப் பொருள்களின் விலைகள் குறித்து நிலவும் வேறுபாடுகளை நீக்குவது தொடர்பாக யாழ்.பிராந்திய சுகாதாரப்பணிப்பாளர் டாக்டர் செல்வி. உமா சிவபாதசுந்தரம் அண்மையில் யாழ். அரசாங்க அதிபர் கே.சண்முகநாதனுடன் கலந்தாலோசனை ஒன்றை நடத்தினார்.

அதன் பிரகாரம் யாழ்.குடாநாட்டிலுள்ள சில்லறை மருந்து வியாபாரிகளுக்கான கலந்துரையாடல் ஒன்று யாழ்.பிராந்திய சுகாதாரப் பணிப்பாளர் அலுவலகத்தில் கடந்த திங்களன்று நடத்தப்பட்டது.

இக்கலந்தரையாடலில் யாழ். குடாநாட்டிலுள்ள சில்லறை மருந்து விற்பனையாளர்கள் பிராந்திய சுகாதாரத் திணைக்கள உணவு, மருந்துப் பரிசோதகர் ரி.மகாதேவா ஆகியோரும் கலந்து கொண்டனர்.

மருந்து வகைகளை மொத்த வியாபாரிகளிடமிருந்து பெறும் சில்லறை மருந்து வியாபாரிகள் கொள்வனவு செய்யப்படும் மருந்துகளின் மொத்த விலையிலிருந்து 15 வீதத்துக்கு அதிகமாக விற்கக்கூடாதெனவும் -

குறித்த விலையிலிருந்து கூடுதலான விலைக்கு விற்பனை செய்வது தொடர்பாக பொதுமக்களிடமிருந்து முறைப்பாடுகள் கிடைத்தால் குறிப்பிட்ட மருந்து விற்பனையாளர் மீது நடவடிக்கை எடுக்கப்படும் எனவும - தீர்மானிக்கப்பட்டது.

எதிர்வரும் ஜனவரி மாதம முதல் இத்தீர்மானம் அமுலுக்குக் கொண்டுவரப்பட உள்ளது. (ம-15-173)

### தவிசாளர் பதவியேற்பு

தென்மராட்சி,டிசெ.21

பச்சிலைப்பள்ளி பிரதேச சபையின் புதிய தவிசாளர், துணைத் தவிசாளர் ஆகியோர் நேற்று முன்தினம் சாவகச்சேரி மாவட்ட நீதிபதி அ.பிறேம்சங்கர் முன்னிலையில் சத்தியபிரமாணம் செய்து தமது பதவிகளைப் பொறுப்பேற்றுக் கொண்டனர்.

புதிய தவிசாளராக வேலு நவரத்தினமும், துணைத் தவிசாளராக திருமதி தயாபரி வி[illegible]யும் பதவிப் பிரமாணம் செய்து கொண்டனர்.

பதவியேற்பு வைபவத்தில் சாவகச்சேரி நகரசபையின் தலைவர் பண்டிற் தனபாலசிங்கம் கலந்து கொண்டார். (ஐ-117)

### வாராந்த நிகழ்வு

தொண்டமனாறு சந்நிதியான் ஆச்சிரம சைவ, கலை, பண்பாட்டுப் பேரவையின் ஆதரவில் சந்நிதியான் ஆச்சிரம மண்டபத்தில் வாராந்த நிகழ்வு நாளை வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில் பேரவையின் தலைவர் தொழிலதிபர் சி.நாகலிங்கம் தலைமையில் நடைபெறும்.

இந்த நிகழ்விற்கான அறிமுகவுரையை அடுத்து முருகநாம பஜனை முருகனடியார்களால் நடத்தப்படும்.

நண்பகல் 12.30 மணிக்கு அடியார்களுக்கு அன்னதானம் வழங்கப்படும். (ஐ-30)

## சாவகச்சேரி நகரசபையின் வரவு செலவுத் திட்ட மதிப்பீட்டுக்கு மாதாந்தக் கூட்டத்தில் அங்கீகாரம்

தென்மராட்சி,டிசெ.21

சாவகச்சேரி நகர சபையின 2001 ஆம் ஆண்டுக்குரிய உத்தேச வரவு செலவுத்திட்ட மதிப்பீடுகள் அண்மையில் நடைபெற்ற மாதாந்தக் கூட்டத்தில் சபையினால் அங்கீகரிக்கப்பட்டது.

இந்த உத்தேச வரவு செலவுத் திட்டத்தின் பிரகாரம் மொத்த வருமானம் 2 கோடியே 24லட்சத்து 67 ஆயிரம் ரூபா எனவும் மொத்த செலவீனம் 2 கோடியே 24 லட்சத்து 53 ஆயிரம் ரூபா என்றும் மதிப்பிடப்பட்டுள்ளது.

சாவகச்சேரி நகர சபையின் புனருத்தாருண அபிவிருத்தி வேலைகளுக்கென ஒருகோடி ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இவற்றில் சபை வருமானத்தின் 19 சதவீத நிதியான 30 லட்சம் ரூபாவும் அடங்கும். இதில பொதுச் சந்தை திருத்த வேலைக்கு 10 லட்சம் ரூபாவும், வீதிகள், வடிகால் அமைப்புக்கு 15 லட்சம் ரூபாவும், பஸ் நிலைய புனரமைப்பு வேலைகளுக்கு ஐந்து லட்சம் ரூபாவும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இவற்றுடன் பொது நூல் நிலையங்களுக்கு புத்தகங்கள் கொள்வனவுக்கு மூன்று லட்சம் ரூபாவும், சத்துணவுத் திட்டத்திற்கு ஒன்றரை லட்சம் ரூபாவும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. (ஐ-117)

### சமுர்த்தி செயலணிக் கூட்டம்

கோப்பாய்,டிசெ.21

வலி.கிழக்கு பிரதேச செயலர் பிரிவிற்கு உட்பட்ட ஆவரங்கால் கிழக்கு ஜே-276 பிரிவில் சமுர்த்தி செயலணி அமைக்கும் கூட்டம் நாளை வெள்ளிக்கிழமை காலை9.30 மணிக்கு ஆவரங்கால் ஸ்ரீ விஸ்ணு வித்தியாலய மண்டபத்தில் சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர் ஆ. ரமணன் தலைமையில் நடைபெறும்.

18 வயதிற்கும் 35 வயதிற்கும் இடைப்பட்ட ஆண், பெண் இருபாலாரையும் சமுகமளிக்குமாறு கேட்கப்பட்டுள்ளது. (ம-72)

## அரிசியின் தரத்தைப் பரிசோதிக்க சுகாதார பரிசோதகருக்கு உத்தரவு

யாழ்ப்பாணம்,டிசெ.21

கூட்டுறவுச் சங்கக்கிளைகள் மற்றும் தனியார் கடைகள் ஆகியவற்றில் தரமான அரிசி விற்கப்படுகின்றதா எனப் பரிசோதித்து உணவுச் சட்டத்தின் கீழ் நடவடிக்கை எடுக்கும்படி சகல பொதுச் சுகாதார பரிசோதகர்களுக்கும் சுகாதார வைத்திய அதிகாரிகள் ஊடாக மாகாண சுகாதார சேவைகள் பிரதிப பணிப்பாளர் டாக்டர். செல்வி உமா சிவபாதசுந்தரம் உத்தரவிட்டுள்ளார்.

இதற்கான உத்தரவு அடங்கிய சுற்றறிக்கை சகல சுகாதாரப் பரிசோதகர்களுக்கும் பணிப்பாளரால் அனுப்பி வைகைகப்பட்டுள்ளது. (ம-15)

## பருத்தித்துறைக்கு வரும் லொறிச் சாரதிகளுக்கு மலசலகூட வசதி இல்லை

பருத்தித்துறை,டிசெ.21

பருத்தித்துறை துறைமுகத்தில் இருந்து பொருள்களை ஏற்றும் லொறிகள் ஓராங்கட்டைச் சந்தியிலேயே நிறுத்தப்படுகின்றன. இவற்றின் சாரதிகளுக்கும் ஏனைய ஊழியர்களுக்குமென ஒரேயொரு மலசலகூடமே கட்டிக் கொடுக்கப்பட்டிருந்தது. அந்த மலசலகூடமும் பாவனைக்கு உதவாத நிலையில் உடைந்துள்ளது. இது குறித்து வாகனச் சாரதிகள் பல தடவைகள் எடுத்துக் கூறியும் திருத்தம் செய்யப்படவில்லை. இதனால் வெளியூர்களில் இருந்து துறைமுக வேலைக்காக வருபவர்கள் உபாதைகளையும் சுகாதாரக் கேட்டையும் எதிர் நோக்குகின்றனர்.

இதன் திருத்த வேலைகள் மேற்கொள்ளப்படாமையினால் சாரதிகள் தூர இடங்களுக்கு மலசலம் கழிப்பதற்காகச் செல்ல வேண்டியுள்ளது.

லொறிச் சாரதிகள் மற்றும் ஊழியர்கள் பயன்படுத்தவென இரண்டு ஆண்டுகளுக்கு முன் இந்த மலசலகூடம் ஓராங்கட்டைப்பகுதியில் அமைகைகப்பட்டது. தற்போது அதன் குழி உடைந்து சேதமடைந்துள்ளது. (ஐ-118)

### உதைபந்தாட்ட சுற்றுப்போட்டி

வலி.வடக்கு,டிசெ.21

வலிகாமம் உதைபந்தாட்ட லீக்கினால் உதைபந்தாட்ட மத்தியஸ்தர் அமரர் அ.தம்பிராசா ஞாபகார்த்தமாக நடத்தப்பட்டு வரும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் நாளை வெள்ளிக்கிழமை மல்லாகம் ஸ்ரீபாஸ்கரன் விளையாட்டு மைதானத்தில் நடைபெறும் ஆட்டங்களில் கலந்து கொள்ளவுள்ள அணிகளின் விவரம் வருமாறு:-

ஏழாலை கண்ணகி வி.கழகம் எதிர் தெல்லிப்பழை நாமகள் வி. கழகம். (ஐ-86)

### இளைஞன் கைது

யாழ்ப்பாணம்,டிசெ.21

புன்னாலைக்கட்டுவனைச் சேர்ந்த இளைஞன் ஒருவரை கடந்த 16 ஆம் திகதி சனிக்கிழமை ஊரெழு இராணுவத்தினர் கைது செய்துள்ளதாக யாழ். மனித உரிமைகள் ஆணைக்குழுவிடம் அவரது தாயாரால் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

நிலாவரை வீதி, புன்னாலைக் கட்டுவனைச் சேர்ந்த சச்சிதானந்தம் சுதன் (வயது18) என்ற இளைஞனையே ஊரெழு இராணுவத்தினர் கைது செய்துள்ளனர் என்றும்-

இளைஞனைக் கைது செய்தமைக்கான பற்றுச் சீட்டும் இராணுவத்தினரால் வழங்கப்பட்டுள்ளது என்றும் - தெரிவிக்கப்பட்டது. (ம-605)


## நன்றி நவில்கின்றோம்

இராணுவத்தால் கைது செய்யப்பட்ட
யா/தொழில்நுட்பக்கல்லூரி மாணவன்
**இ. ஸ்ரீரங்கநாதன் அவர்களை**
விரைவில் மீட்டு பூரண கல்வியைத் தொடர வைத்த
**E.P.D.P** யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்
*திரு. V. K. குகேந்திரன்* (ஜெகன்)
அவர்களுக்கும்
அவரது கட்சிக்கும் எமது மனமுவந்த நன்றியைத்
தெரிவித்துக் கொள்கின்றோம்.

சகோதரி
திருமதி இ.இரத்தினசபாபதி

*எழுதுமட்டுவாழ் வடக்கு,*
*எழுதுமட்டுவாழ்.* (81888)



## கண்ணீர் அஞ்சலி



அருள்மிகு நீர்வேலி கந்தசுவாமி கோயில் பிரதமகுரு
**பிரம்மஸ்ரீ**
**சுவாமிநாத இராசேந்திரக் குருக்கள்**
அவர்களின் மறைவுச் செய்தி அறிந்து ஆழ்ந்த கவலை அடைவதுடன், அவரது பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்து அவரது ஆத்ம சாந்திக்காகவும் பிரார்த்திக்கின்றோம்.

ஸ்ரீ முருகன் தொலைத் தொடர்பகம்
கந்தசுவாமி கோயில் வடக்கு வீதி,
நீர்வேலி.
(81901)



## உங்களுக்குத் தேவையான!

- சகல விதமான காலணி வகைகள்
- சப்பாத்து வகைகள்
- பாடசாலை உபகரணங்கள்
- கொப்பி வகைகள்
- பலவகையான பாடசாலை **Bags**
- மின்சார உபகரணங்கள்
- அன்பளிப்புப் பொருள்கள்
- ஓடியோ, வீடியோ கசட் வகைகள்
- மணிக்கூடு, றேடியோ வகைகள்

அனைத்தையும் ஒரே இடத்தில்
மலிவு விலையில் வாங்க
நாடவேண்டிய இடம்.

## விதுஜா சுப்ப மார்க்கட்

*இணுவில் சந்தி, இணுவில்.*

(81886) தொ.பேசி இல. 070-212216

# வரவேற்பு விருந்துபசார அழைப்பு

## இராமநாதன் நுண்கலைக் கழகம்
யா / பல்கலைக்கழகம்

மேற்படி நிகழ்வு நாளை 22 ஆம் திகதி வெள்ளிக் கிழமை காலை 9.00 மணியளவில் நடைபெற உள்ளது. குறுங்கால விடுமுறை காரணமாக இராமநாதன் நுண்கலைக்கழக 3ஆம், 4 ஆம் வருட மாணவர்களுக்கு இவ் அழைப்பு சென்றடையவில்லை. எனவே இதனை தனிப்பட்ட அழைப்பாக ஏற்று 3 ஆம், 4 ஆம் வருட மாணவர்களை தவறாது கலந்து கொள்ளும் வண்ணம் தயவன்போடு கேட்டுக்கொள்கின்றோம்.

2ஆம் வருட மாணவர்கள்,
இராமநாதன் நுண்கலைக்கழகம்
யா / பல்கலைக்கழகம்.

யாழ்ப்பாணம். (81890)

# சேர் பொன். இராமநாதன் வேதாகம ஆய்வு நிறுவனம் சிவாச்சார்ய குருகுலம்

யாழ். பல்கலைக்கழக ஸ்ரீ பரமேஸ்வரன் ஆலயம்
திருநெல்வேலி

★ 2001 ஆம் ஆண்டுக்குரிய புதிய மாணவர்களின் அனுமதி.
★ வெளிவாரி நிலையில் பரீட்சைகளுக்குத் தோற்றுவதற்காக விண்ணப்பித்தல்.

மேற்படி குருகுலத்தில் புதிய ஆண்டுக்குரிய மாணவர்களை அனுமதிப்பதற்கு உரிய விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. மேலும் குருகுல பாடத்திட்டத் திற்கமையச் சிவாச்சார்யப் பயிற்சிகளைப் பெற்றுக் குருகுலத்தின் பரீட்சைகளில் வெளிவாரிப் பரீட்சார்த்தியாகத் தோற்றுவதற்குரிய விண்ணப்பங்களும் கோரப்படுகின்றன.

★ பாடசாலைக் கல்வியை முடித்துக் குருத்துவப் பணிகளில் ஈடுபடுபவர்களுக்கு வெளிவாரி நிலையில் பரீட்சைகளில் தோற்றுவதற்கு வயதெல்லை இல்லை.

மேற்குறித்தவற்றுக்கான விண்ணப்பப் படிவங்களைப் பரமேஸ்வரன் ஆலயத்திலும், நல்லூர் சிவன் கோயிலிலும் பெற்றுக்கொள்ளலாம்.

★ விண்ணப்ப முடிவு திகதி: 15-01-2001

இணைப்பாளர்,
சிவாச்சார்ய குருகுலம்.
(81897) 21-12-2000.

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



## அமரர் முருகப்பர் சுப்பிரமணியம்

தோற்றம்: 23 - 11 - 1912
மறைவு: 02 - 01 - 2000

ஆண்டுத் திதி:- 21 - 12 - 2000

நம்பவே முடியவில்லை நடந்து முடிந்தது ஓர் ஆண்டெனவே!
உம்பர் உலகம் சென்று நீ அடைந்து விட்ட பின்னரே
வாழும் தெம்பினை நீ தந்து சென்று விட்ட போதிலும்
இன்னும் அம்புவியில் நாம் எல்லாம் கலங்குகின்றோம் உன்னை எண்ணி.

மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

தும்பளை,
பருத்தித்துறை. (சி-14329)

# ஒலி நாடா வெளியீடு

கொழும்புத்துறை, டிசெ 21

அருட்திரு.ம. றெக்ஸ் சவுந்தரா அடிகளாரினால் உருவாக்கப்பட்ட ''இது எங்கள் காணிக்கை'' ஒலி நாடா வெளியீடு இன்று வியாழக் கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு சில்லாலை றோமன் கத்தோலிக்கப் பாடசாலையில் நடைபெறும்.

(ம-30)

# செயற்பாட்டறை அமைத்துத் தரக் கோரிக்கை

வலிகாமம் தெற்கு, டிசெ. 21

சுதுமலை சிந்மய பாரதி வித்தியாலயத்தில் தரம் 1, தரம் 2 மாணவர்களுக்கான செயற்பாட்டறைத் தொகுதி இன்னும் அமைக்கப்படாமையால் மாணவர்களின் செயற்பாட்டுத் திறன் விருத்தியடைய வாய்ப்பில்லாமல் இருப்பதைச் சுட்டிக் காட்டி, விரைவில் செயற்பாட்டறைத் தொகுதியை அமைத்துத் தருமாறு பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தினர் கோரியுள்ளனர்.

வலிகாமம் கல்வித் திணைக்களம், வடக்கு-கிழக்கு மாகாணக் கல்வித் திணைக்களம் மற்றும் ''றான்'' நிறுவனம் ஆகியவற்றுக்கு இவர்கள் தமது கோரிக்கையை அனுப்பி வைத்துள்ளனர்.

(ம-152)

# ஒளி விழா

நவாலி, டிசெ. 21

சண்டிலிப்பாய்ப் பிரதேச செயலக நலன்புரிக் கழகம் நடத்தும் ஒளி விழா எதிர் வரும் 27 ஆம் திகதி புதன் கிழமை பகல் 10 மணி முதல் பிரதேச செயலர் நா. வேதநாயகன் தலைமையில் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் இடம்பெறும்.

[ம-100]

★ ★ ★

கொழும்புத்துறை, டிசெ. 21

யாழ்ப்பாணம் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் ஏற்பாட்டில் நடைபெறும் ஒளிவிழா நாளை மறுதினம் சனிக்கிழமைபகல் 11மணிக்கு சங்க நடுவப் பணிமனையில் சங்கத் தலைவர் சி. வீ. கே. சிவஞானம் தலைமையில் நடைபெறவுள்ளது.

(ம-30)

# கப்பலில் தபால்கள்

யாழ்ப்பாணம், டிசெ. 21

குடாநாட்டுக்கான வெளியூர்த் தபால்கள் அடங்கிய 376 தபால்பொதிகளும் யாழ். வைத்தியசாலைகளுக்கான மருந்துப்பொருள்களும் திருகோணமலையில் இருந்து செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவின் கப்பல் மூலம் பருத்தித்துறைக்கு எடுத்துவரப்பட்டுள்ளன.

இதே கப்பலில் குடாநாட்டில் சேகரிக்கப்பட்ட வெளியூர்த் தபால்கள் அடங்கிய 43 பொதிகள் அனுப்பி வைக்கப் பட்டுள்ளதாகவும் யாழ். பிரதம தபாலக அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (இ-6-5)

# தளபாடங்கள் விற்பனைக்கு

புடைவைக் கடைக்குரிய நல்ல நிலையிலுள்ள
அலுமாரிகள், சோக்கேசுகள்
மானிப்பாயில் விற்பனைக்குண்டு.
தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி:
சி. மனோகரசீலன்
நாவலடி ஒழுங்கை,
மானிப்பாய்.
(81857)

# மலிவு விற்பனைக்கு

நல்லின ஒட்டுத் தோடை, ஒட்டுஎலுமிச்சை, ஒட்டுமாங்கன்றுகள்(விளாட்), றோசாக் கன்றுகள், விதை எலுமிச்சை, லெமன், மலை வேம்புக் கன்றுகள் விற்பனைக்கு உண்டு.

தொடர்பு:
யாழ்ப்பாணக் கல்லூரி விவசாய நிறுவனம்
மருதனார் மடம், சுன்னாகம்.
(81905)

# கண்ணீர் அஞ்சலி

எமது பாடசாலை உப அதிபர்
செல்வி தா. மேரி யோகராணியின்
அன்பு மாமனார்

## வேதமுத்து அற்புதம்

அவர்கள் மரணமானதையிட்டு எமது கண்ணீர் அஞ்சலிகளைச் செலுத்துகின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்.
யா/ உரும்பிராய் றோ.க.த.க. பாடசாலை.
(81900)

# கண்ணீர் அஞ்சலி

அருள்மிகு நீர்வேலி கந்தசுவாமி கோயில் பிரதமகுரு

பிரம்மஸ்ரீ

## சுவாமிநாத இராஜேந்திரக் குருக்கள்

அவர்களின் மறைவுச் செய்தி அறிந்து ஆழ்ந்த கவலை அடைவதுடன் அவரது பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்து அவரது ஆத்ம சாந்திக்காகவும் பிரார்த்திக்கின்றோம்.

நீர்வேலி
ஸ்ரீ சுப்பிரமணிய சனசமூக நிலைய
நிர்வாகிகள்.
(81903)

# மரண அறிவித்தல்கள்

## சுவாமிநாதக்குருக்கள் இராஜேந்திரக்குருக்கள்

(பிரதமகுரு, நீர்வேலி கந்தசுவாமி கோயில்)

நீர்வேலி கந்தசுவாமி கோயில் பிரதம குரு சுவாமிநாதக்குருக்கள் இராஜேந்திரக்குருக்கள் (இராசுக்குருக்கள்) நேற்று [20-12-2000] புதன்கிழமை முருகனடி சேர்ந்து விட்டார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று [21-12-2000] வியாழக்கிழமை காலை 8 மணியளவில் நடைபெறும்.

தகவல்:
இரா. சுவாமிநாதக்குருக்களும்
குடும்பத்தினரும்.

நீர்வேலி.

(சி/14385)

## கதிரவேலு பரமசாமி (ஈழநாடு)

தலையாழி அருள்மிகு ஞானவைரவர் ஆலய பரிபாலன சபைச் செயலாளரும், ஆலய பஞ்சாயத்து உறுப்பினரும், நல்லூர் பல நோக்குக் கூட்டுறவுச் சங்க முன்னாள் உபதலைவரும், கூட்டணி இளைஞர் பேரவையின் முன்னாள் பொருளாளரும், காலஞ்சென்ற பத்திராதிபர் கதிரவேலு - இராசம்மா தம்பதிகளின் சிரேஷ்ட புதல்வருமாகிய பரமசாமி அவர்கள் நேற்று (20-12-2000) புதன்கிழமை சிவபதம் அடைந்தார்.

அன்னார் திருமதி குணமணிதேவி (ஓய்வுபெற்ற ஆசிரியர், யாழ். வைத்தீஸ்வராக்கல்லூரி), சண்முகலிங்கம் (கனடா), இராஜேஸ்வரி ஆகியோரின் சகோதரரும், காலஞ்சென்ற சட்டத்தரணி சண்முகடாஸ் மற்றும் திரு. S. நவரத்தினம், திருமதி ரஞ்சனி ஆகியோரின் மைத்துனரும், நவராஜகுமாரனின் மாமனாரும், மயூரியின் பெரியப்பாவும் ஆவார்.

இறுதிக்கிரியைகள் இன்று (21-12-2000) வியாழக் கிழமை காலை 10 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் கொக்குவில் இந்து மயானத்துக்கு தகனக்கிரியைகளுக்காக எடுத்துச்செல்லப்படும். இவ்வறிவித்தலை, உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளும்படி தயவாகக் கேட்டுக் கொள்கிறோம்.

தகவல்:
திருமதி கு. சண்முகடாஸ்,
(சகோதரி)

இல. 6, பிரம்படி ஒழுங்கை,
கொக்குவில் கிழக்கு,
கொக்குவில்.
(81906)

## கண்ணீர் அஞ்சலி

யாழ். பல்கலைக்கழக நுண்கலைப்பீட மாணவி
செல்வி யா. யசோதினி
அவர்களின் தந்தையார்

### க. யாதவராஜன்

அவர்களின் மறைவுச் செய்தி அறிந்து ஆழ்ந்த கவலையடைவதுடன், அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

R. A. F. A. விடுதி
மாணவிகள்.

(81920)

## கண்ணீர் அஞ்சலி

அருள்மிகு நீர்வேலி கந்தசுவாமி கோயில்
பிரதம குரு

### பிரம்மஸ்ரீ சுவாமிநாத இராசேந்திரக் குருக்கள்

அவர்கள் இறைபதம் அடைந்த செய்தி அறிந்து ஆழ்ந்த கவலையடைகின்றோம்.
அவரது பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அவரது ஆத்ம சாந்திக்காகவும் பிரார்த்திக்கின்றோம்.

பாலர் பகல்விடுதிச் சமூகம்.
நீர்வேலி. (81916)

## கண்ணீர் அஞ்சலி

### கதிரவேலு பரமசாமி

(தலையாழி ஞான வைரவர் ஆலய செயலாளர்)

அவர்களின் மறைவையொட்டி எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கிறோம்.
அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கிறோம்.

இந்து இளைஞர் மன்றம்
தலையாழி ஞான வைரவர் ஆலயம்.

(81915)

## கண்ணீர் அஞ்சலி

பாரம்பரியம் மிக்க வேதாகம விளக்கு


### சிவஸ்ரீ சுவாமிநாத இராஜேந்திரக் குருக்கள்

அவர்கள் முருகன் திருவடிநீழலை அடைந்தமையை இட்டு நியந்தரி தனது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றது.

நியந்தரி
சிவன் கோயில்,
நல்லூர்.

(சி/14390)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம்: 09 — 08 — 1943
மறைவு: 22 — 12 — 1999

திருமதி
### நாகராசா இமெல்டா அல்வினம்மா
(லக்கிலி)

உங்கள் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனை வேண்டுகின்றோம்.
பாண்டியன்தாழ்வு புனித அன்னம்மாள் தேவாலயத்தில் நாளை (22 - 12 - 2000) வெள்ளிக்கிழமை காலை 7.00 மணிக்கு (மு. நே.) அன்னாரின் ஆத்தும இளைப்பாற்றுக்கு திருப்பலி ஒப்பு கொடுக்கப்படும்.

உங்கள் பிரிவால் துயருறும்
கணவன், மகள்,
சகோதரிகள், மைத்துனர்கள்.

நிரந்தர முகவரி:
1/10, புது வீதி,
முதலாம் ஒழுங்கை,
கொய்யாத் தோட்டம்,
யாழ்ப்பாணம். (81912)

## மணல் ஏற்றத் தடை

வடமராட்சி கிழக்கு உதவி அரசாங்க அதிபர் பிரிவுக்கு உட்பட்ட பகுதிகளிலிருந்து வாகனங்களில் மணல் ஏற்றுவது தடை செய்யப்பட்டுள்ளதாக உதவி அரசாங்க அதிபர் எஸ். வேலாயுதபிள்ளை அறிவித்துள்ளார்.

மணல் ஏற்றுவதற்கான அனுமதிப்பத்திரம் உதவி அரசாங்க அதிபர் பணிமனையில் மட்டும் வழங்கப்படுமெனவும் ஏனைய பிரதேச செயலகங்களில் அனுமதிப்பத்திரம் வழங்குவது நிறுத்தப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது. (இ-117)

## பதிவகத்தில் விண்ணப்பம் ஏற்பது நிறுத்தம்

யாழ். மாவட்டப் பதிவகத்தில் பொதுமக்களுக்கான பணிகள் இன்று முதல் எதிர்வரும் 31 ஆம் திகதி வரை இடைநிறுத்தப் பட்டுள்ளன என்று மேலதிக மாவட்டப் பதிவாளர் ந. சதாசிவ ஐயர் அறிவித்துள்ளார்.

இந்தக் காலப் பகுதியில் விவாக, பிறப்பு, இறப்புச் சான்றிதழ்களைப் பெறுவதற்கான விண்ணப்பங்கள் ஏற்பது இடம்பெறாது என்றும் —

அடுத்த மாதம் முதலாம் திகதி முதல் வழமையான பணிகள் இடம்பெறும் என்றும்— அவர் தெரிவித்தார்.

வருடாந்த வேலைகளைப் பூர்த்தி செய்வதற்காகவே இந்த ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டது. [இ-3-173]

## பல்கலைக்கழக மாணவன் காயம்

யாழ். பல்கலைக்கழக மாணவர்களிடையே இடம்பெற்ற தனிப்பட்ட பகைமை காரணமாக மாணவர்களால் தாக்கப்பட்ட 1 ஆம் வருட மாணவன் ஒருவர் காயமடைந்து யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

கடந்த சனி இரவு இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் தர்மபுரத்தைச் சேர்ந்த இராசையா ஜெகருபன் என்பவரே காயமடைந்தவராவார். (இ-5-6)

## விசேட தபால் சேவை

கொழும்பு, டிசெ. 21

நத்தார்ப் பண்டிகையை முன்னிட்டு விசேட தபால் சேவை ஒன்று செயற்படுத்தப்படுகிறது.

பண்டிகைக் காலத்துக்குரிய தபால்களைக் கையாளுவதற்காக 300 பேர் மேலதிகமாக இந்தச் சேவையில் ஈடுபடுத்தப்பட வுள்ளனர்.

பொதிகள் விநியோகத்துக்கெனப் 15 சேவைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. வாழ்த்து மடல்களையும், வெளிநாட்டுத் தபால்களையும் விநியோகிக்கவென விசேட சேவைகள் நடைபெறவுள்ளன. (இ-10)

## மீளப் பிடித்த இடங்களில் கண்ணிவெடிகள்

கொழும்பு, டிசெ. 21

படையினரால் மேற்கொள்ளப்பட்ட 'கினிகிர' 5 இரண்டாம் கட்ட நடவடிக்கையின் போது மீளக் கைப்பற்றப்பட்ட பிரதேசங்களிலிருந்து 603 நிலக்கண்ணிவெடிகள் கண்டு பிடிக்கப்பட்டுள்ளன.

நிலத்தின் கீழ் புதைக்கப்பட்ட 70 கிலோ அதிகமான கண்ணிவெடிகள் மேலும் உள்ளன என்று பிரிகேடியர் சனத் கருணாரட்ண தெரிவித்துள்ளார்.

கண்ணிவெடிகளை அகற்றும் பணிகள் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன. (இ-10)

## கண்ணீர் அஞ்சலி

நீர்வேலி கந்தசுவாமி கோயில் பிரதமகுரு
பிரம்மஸ்ரீ

### சுவாமிநாத இராசேந்திரக்குருக்கள்

அவர்கள் இறைபதம் அடைந்த செய்தி அறிந்து ஆழ்ந்த கவலை அடைகின்றோம்.
அன்னாரது பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அவரது ஆத்ம சாந்திக்காக இறைவனை வேண்டுகின்றோம்.

ஸ்ரீமுருகன் மாதர் சிக்கனக்கடனுதவு
கூட்டுறவுச் சங்கம்.
நீர்வேலி. (81917)

## (இதய அஞ்சலி)

நீர்வேலி கந்தசாமி கோயில் பிரதம குருவும் சர்வதேச இந்துமத குருமார் ஒன்றிய கௌரவ வித்துவசபை உறுப்பினருமான அமரத்துவமடைந்த

### சிவஸ்ரீ சுவாமிநாத இராஜேந்திரக்குருக்கள்

அவர்களின் திடீர் மறைவையிட்டு எமது அமைப்பின் சார்பாக எமது இதய அஞ்சலியைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் குடும்பத்தவர்களுக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

சர்வதேச இந்துமத குருமார் ஒன்றியம்,
யாழ்ப்பாணம். (81919)

## மரண அறிவித்தல்கள்

### நாகமணி சிங்கராசா

குரும்பசிட்டி தெல்லிப்பழையைப் பிறப்பிடமாகக் கொண்டவரும், தற்போது கொழும்பில் வசித்தவருமான நாகமணி சிங்கராசா 15 - 12 - 2000 அன்று கொழும்பில் காலமானார்.

இவர் காலஞ்சென்றவர்களான குரும்பசிட்டி நாகமணி அன்னப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மகனும், வேலணை மேற்கு காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி கண்மணியின் அன்பு மருமகனும், இரத்தினத்தின் அன்புக் கணவரும், இராஜேஸ்வரி (கனடா), ஜெகதீஸ்வரி, யோகேஸ்வரி (கொழும்பு), நகுலேஸ்வரி (ஜேர்மனி), காலஞ்சென்ற கதிர்காமநாதன் மற்றும் சிவபாலன் (கனடா), இந்திரபாலன் (ஜேர்மனி) ஆகியோரின் பாசமிகு தந்தையும், இராசதுரை (கனடா), சாந்தலிங்கம் (சாந்தி லொஜ் — மருதானை), காலஞ்சென்ற வேல்முருகன் (வடிவேல் — கொழும்பு, யாழ்ப்பாணம் வர்த்தகர்) மற்றும் பகவதசிங்கம் (ஜேர்மனி), ரூபமதி (கனடா), சத்தியா (ஜேர்மனி) ஆகியோரின் அன்பு மாமனாரும், நாகரத்தினம் (நெடுங்கேணி), மனோன்மணி (வரக்காப்பொலை), தனபாலசிங்கம் (இணுவில்) ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (21 - 12 - 2000) வியாழக்கிழமை பொரளை கனத்தை இந்து மயானத்தில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
பசுபதிப்பிள்ளை கார்த்திகேசு
(பெறாமகன்)
55, வைமன் வீதி,
நல்லூர்,
யாழ்ப்பாணம். (81924)

### கனகர் சின்னத்தம்பி

கைதடி மத்தியைப் பிறப்பிடமாகவும், தற்போது உடுவிலில் வசித்தவருமாகிய கனகர் சின்னத்தம்பி அவர்கள் நேற்று 20-12-2000 காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற கனகர் சிதம்பரம் ஆகியோரின் இளைய புதல்வனும், காலஞ்சென்ற வள்ளியம்மை, தம்பிஐயா ஆகியோரின் சகோதரனும், காலஞ்சென்ற சின்னத்தம்பி, கதிர், பண்டாரி, கதிரவேலு ஆகியோரின் மைத்துனரும், காலஞ்சென்ற சிவயோகன், சிவகுரு, சிவபாக்கியம், சிவமணி, சிவநாதன், சிவதாசன் ஆகியோரின் பாசமிகு தகப்பனும், வவுனிக்குளம் செல்லம்மா, சண்முகம், சின்னத்துரை, பரமேஸ்வரி, ஜெகதீஸ்வரி ஆகியோரின் பாசமிகு மாமனும், வவுனிக்குளம் சிவசெந்தினி, சிவாகரன், சிவநந்தினி, ரேகா (லண்டன்), சிவறஞ்சுதன், சிவசுபோதினி, சிவசுமோதினி, சுபாஸ்கரன், தயாழினி, தயாநிதி, சாந்தமூர்த்தி, பாலசுப்பிரமணியம், கமலன், தனுசியா, பிரியதர்சினி (ஜேர்மனி), தவமணி, கோகிலரஞ்சிதம், இராசலிங்கம், நிருஜா, அகிலன் ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (21-12-2000) வியாழக்கிழமை பிற்பகல் 1 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் பூவோடை மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்
சி. சிவகுரு
(மகன்)
அம்பலவாணர் வீதி,
உடுவில் கிழக்கு. (81922)

SALE SALE SALE SALE

நத்தார், புதுவருடத்தை முன்னிட்டு

மகாநதியின்

மாபெரும் சிறப்புத் தள்ளுபடி விற்பனை

31.12.2000 வரையுமே!

இப்போது எழில்மிகு நத்தார், புதுவருட புடைவைகள் உங்களது அபிமான "மகாநதியில்" கண்கவரும் அணிவகுப்பில் பவனி வருகின்றன.



கலர்களோ ஏராளம்...
விலைகளோ நீங்கள்
சந்தோசத்துடன்
கொடுத்திடும் அளவே!



பல்வேறு புதிய டிசைன்களிலும் நவீன ரகங்களிலும் உங்கள் வரவுக்குக் காத்திருக்கின்றன.

மகாநதி புடவை அகம்

(முகூர்த்தப் பட்டுப் புடைவைகளுக்கு கைராசியான நிறுவனம்)

16,நவீன சந்தை,
யாழ்ப்பாணம்.
தொலைபேசி இல:
021-2552 (C/14388)

சாறி பிளவுஸ் பீஸ் துணி வகைகளுக்கு பிரத்தியேகக் காட்சி அறை
16,நவீன சந்தை(மேல்மாடி)
யாழ்ப்பாணம்.



# தேவை

பிரபல ஸ்தாபனத்திற்கு விற்பனைப் பொருள்களைப் பொதிசெய்வதற்கு (Packing) பெண் பிள்ளைகள் தேவை. 20 வயது தொடக்கம் 35 வயது வரை. யாழ். மாநகர சபை எல்லைக்குள் வசிப்பவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும். விண்ணப்பிப்பவர்கள் சுய விவரம் அடங்கிய எழுத்து மூலமான விண்ணப்பங்களை 28.12.2000 க்கு முன் கீழ்க் கண்ட முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.

விளம்பரதாரர்
304 (110)ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
(81776)


# கண்ணீர் அஞ்சலி

தலையாழி அருள்மிகு ஞானவைரவர் ஆலய அறநெறிப் பாடசாலை அதிபர்
திருமதி சண்முகதாஸ் அவர்களின்
அன்புச் சகோதரர்

## கதிரவேலு பரமசாமி

அவர்களின் மறைவுச் செய்தி அறிந்து அன்னாரின் குடும்பத்தினருக்கு எங்களது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய அருள்மிகு ஞானவைரவப் பெருமானைப் பிரார்த்திக்கின்றோம்.

*தலையாழி,*
*கொக்குவில்.*

ஆசிரியர்கள்,மாணவர்கள்,
அறநெறிப் பாடசாலை.
(81923)

# இதய அஞ்சலி



நீர்வேலி அருள்மிகு கந்தசுவாமி கோவில் பிரதமகுருவும் எங்கள் குல குருவுமாகிய

## சுவாமிநாத. இராஜேந்திரக்குருக்கள்

அவர்களின் பிரிவு குறித்து எமது அஞ்சலிகளை சமர்ப்பித்து வணங்குகிறோம்.

க.ஆறுமுகம் ஆசிரியர்
குடும்பம்.
*இணுவில்.* (81895)

# சமுர்த்தி வலய அலுவலக திறப்புவிழா

யாழ்ப்பாணம்,டிசெ.21

நல்லூர் பிரதேச செயலர் பிரிவு சமுர்த்தி வலய அலுவலகத் திறப்பு விழா நாளை வெள்ளிக்கிழமை பிற்பகல் 3மணிக்கு கொக்குவிலில் இடம் பெறவுள்ளது.

சமுர்த்தி முகாமையாளர் இ. ஜெயதாஸ் தலைமையில் இடம் பெறும் இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக நல்லூர் பிரதேச செயலர் கலாநிதி க.குணராஜா கலந்து கொள்வார். (இ-3)

# உயிரியல் பாட கருத்தரங்கு

வலி.தெற்கு,டிசெ.21

ஜி.சீ.ஈ. உயர்தர வகுப்பில் உயிரியல் பிரிவில் கற்கும் மாணவர்களின் நலன் கருதி வலிகாமம் கல்வி வலய விஞ்ஞான பாட உதவிக் கல்விப் பணிப்பாளரால் உயிரியல் பாடக் கருத்தரங்கு ஒன்று ஒழுங்கு செய்யப் பட்டுள்ளது.

யாழ். பல்கலைக்கழக விவசாய பீடத்தைச் சேர்ந்த விவசாய, உயிரியல் துறையினரின் உதவியுடன் நுண்ணுயிரியல், தாவர நோயியல் ஆகியன பற்றிய கருத்தரங்கும் செயல் முறை வகுப்புக்களும் நடைபெறவுள்ளன.

எதிர்வரும் 29ஆம் திகதி வெள்ளிக்கிழமை மருதனார்மடம் இராமநாதன் கல்லூரியில் இந்தக் கருத்தரங்கு நடைபெறும்.

உடுவில் தெல்லிப்பழை கோட்டங்களைச் சேர்ந்த பாடசாலை மாணவர்களுக்கு அன்றைய தினமும் -

சண்டிலிப்பாய், சங்கானை கோட்ட மாணவர்களுக்கு இன்னொரு தினத்திலும் கருத்தரங்கு நடத்தப்படும். அடுத்த ஆண்டு ஜி.சீ.ஈ. உயர் தரப் பரீட்சை எடுக்கும் மாணவர்களையும் உயிரியல் பிரிவில் கற்பிக்கும் ஆசிரியர்களையும் கருத்தரங்கில் கலந்து கொள்ளுமாறு உதவிக் கல்விப் பணிப்பாளர் கோரியுள்ளார். (ம-152)

# வினைத்திறமை காண் தடைப் பரீட்சை

யாழ்ப்பாணம்,டிசெ.21

எழுதுநர் சேவை மற்றும் அதை பொத்தசேவைகளில் 'அ' பிரிவில் உள்ளவர்களுக்கான வினைத்திறமை காண் தடைப் பரீட்சைக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

இது தொடர்பாக வடக்கு - கிழக்கு மாகாணப் பொதுச் சேவை ஆணைக்குழு யாழ். பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளருக்கு அறிவித்துள்ளது.

இதற்கான விண்ணப்பங்களைத் தமது திணைக்களத் தலைவர்களூடாக அனுப்ப வேண்டும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.ஆனால் இதற்கான விண்ணப்ப முடிவுதினம் நேற்று 20ஆம் திகதி ஆகும். (ஐ)

# 'உதயதாரகை' படகுச்சேவையும் நிறுத்தம்

யாழ்ப்பாணம்,டிசெ.21

குறிகாட்டுவானுக்கும் - நெடுந்தீவுக்கும் இடையில் பயணிகள் சேவையில் ஈடுபட்டுவந்த நெடுந்தீவு பல.நோ.கூ. சங்கத்துக்குச் சொந்தமான உதயதாரகைப் படகு இயந்திரப் பகுதியில் ஏற்பட்ட கோளாறை அடுத்துநேற்றுடன் தனது சேவையை நிறுத்திக் கொண்டது.

நேற்று மாலை ஒரு தொகுதி பயணிகளுடன் குறிகட்டுவானில் இருந்து நெடுந்தீவு நோக்கிப் புறப்பட்ட சில நிமிட நேரத்திலேயே படகின் இயந்திரப் பகுதியில் கோளாறு ஏற்பட்டதாகவும் -

பின்னர் பலத்த சிரமங்களின் மத்தியில் - நங்கூரம் பாய்ச்சி படகு குறிகட்டுவான் துறைக்கு கொண்டு வரப்பட்டதாகவும் - தெரிவிக்கப்பட்டது.

இதனையடுத்து நேற்றுமாலை நெடுந்தீவுக்குச் செல்லவிருந்த பயணிகள் அனைவரும் நெடுந்தீவைச் சேர்ந்த தனியார் ஒருவருக்குச் சொந்தமான படகின் உதவியுடன் நெடுந்தீவைச் சென்றடைந்தனர்.

கடந்த திங்களன்று நெடுந்தீவை நோக்கிச் சென்ற குமுதினிப்படகும் நெடுந்தீவுதுறைமுகத்தை அண்மித்ததும் பலத்த காற்றினால் திசை மாறி தரைதட்டியதும் -

இதனால் ஏற்பட்ட சேதத்தை அடுத்து அந்தப்படகும் தனது சேவையை நிறுத்திக் கொண்டுள்ளதும் தெரிந்தவையே.

இந்த இரு படகுகளின் சேவைகளும் தடைப்பட்டத்தை அடுத்து தனியார் படகு ஒன்றே நெடுந்தீவுக்கான பயணிகள் சேவையில் இன்று முதல் ஈடுபடவுள்ளது. (இ-7)

# அங்காடி வியாபாரிகளுக்கு தற்காலிக ஒதுக்கீடு

நத்தார் பண்டிகை மற்றும் புதுவருடக் கொண்டாட்டங்களை அடுத்து யாழ்நகரில் அங்காடி வியாபாரிகளுக்கு வசதியாக தற்காலிகமாக வண்ணான்குளத்தின் பிற்பகுதியில் இடம் ஒதுக்கப்பட்டுள்ளது. இவ்விடத்தில் வியாபாரம் செய்யலாமே தவிர, தற்காலிக, நிரந்தர கொட்டில்கள் எதுவும் எவ்விடத்திலும் அமைக்கக்கூடாது.

யாழ்நகரின் மையப்பகுதியில் அங்காடி வியாபாரிகள் வியாபாரம் செய்வது உடனடியாகத் தடை செய்யப்படுகின்றது. தவறும் பட்சத்தில் இவர்களது பொருள்கள் சபையினால் அப்புறப்படுத்தப்படுவதுடன் அவைகள் பறிமுதலும் செய்யப்படும்.

மாநகர சபை
யாழ்ப்பாணம். 20-12-2000 (C/14392)

இராசா. தணிகாசலம்
பதில் மாநகர ஆணையாளர்.

# கண்ணீர் அஞ்சலி

எமது அன்புக்கும், மதிப்புக்குமுரிய
அன்புத் தாத்தா நீர்வேலி
சுவாமிநாதக்குருக்கள் இராஜேந்திரக்குருக்கள்
அவர்கள் நேற்று (20-12-2000) இறைவன் பாதம் எய்தியதையிட்டு
அன்னாரின் குடும்பத்தாரோடு சேர்ந்து
கண்ணீர் அஞ்சலியைக் காணிக்கையாக்குகின்றோம்.

சு.பாஸ்கரன் ஆச்சாரி,
*479, கஸ்தூரியார் வீதி,*
*யாழ்ப்பாணம்.*

சு.பாஸ்கரன் சிற்பாலயம்,
(81926)

# இதய அஞ்சலி

புகழ்பூத்த வேதவிற்பனரும்
எங்கள் குலதெய்வத்தின்
பிரதம குருவுமாகிய



## சுவாமிநாத. இராஜேந்திரக் குருக்கள்

(நீர்வை கந்தசுவாமி கோயில்)
அவர்களின் பிரிவுத் துயரில் தவிக்கின்றோம்.
குருக்கள் ஐயாவின் ஆத்மா சாந்திபெற
கந்தனை இறைஞ்சுகிறோம்.

*வூட்சன்ஸ் நிறுவனம்,*
*யாழ்ப்பாணம்.*

அமரர் மு.தா.பொன்னம்பலம்
குடும்பம். (81927)

# கண்ணீர் அஞ்சலி

நீர்வேலி அருள்மிகு கந்தசுவாமி கோயில்
பிரதம குருக்களும், வித்துவ சபை உறுப்பினரும்
எமது நிறுவனத்தின் அபிமானியும் ஆகிய

## சிவஸ்ரீ இராஜேந்திரக் குருக்கள்

அவர்கள் நேற்று **(20 / 12 / 2000)** புதன்கிழமை சிவபதம் எய்தியதையிட்டு எமது கண்ணீர் அஞ்சலியைக் காணிக்கையாக்குகின்றோம். அன்னாரின் பிரிவால் துயருற் றிருக்கும் சைவத்தமிழ் உலகிற்கும் இவரின் குடும்பத்தி னருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பது டன் குருக்கள் ஐயாவின் ஆத்மா சாந்தியடைய இறை வனைப் பிரார்த்திக்கின்றோம்.

பணிப்பாளர்கள், பணியாளர்கள், கிளைக்குழுவினர்.
*வலி, கிழக்கு தென்பகுதி ப.நோ.கூ.சங்கம்,*
*நீர்வேலி.*
(C/14393)

# ஆண்டு மூன்றின் அணையாத நினைவலைகள்

மண்ணில்
25
-
01
-
1971



மனங்களில்
21
-
12
-
1997

## கனகசுந்தரம் பாலகுமார்

(பதுமன்)
கொடிகாமம்

*மனங்களில் நிறைந்தவன்*
*மனிதர்களை நேசித்தவன்*
*உணர்வுகளால் வரையப்பட்டவன்*
*உன்னதமானவன்*

உன் பதிவுகளின்
மூன்றாவது ஆண்டின் நினைவுகளை
புரட்டுகின்றோம்.

- நண்பர்கள்

*கொடிகாமம்.* (81913)

# யாழ்ப்பாணம் - கருகம்பனை பஸ் சேவை மீண்டும் ஆரம்பம்

## துர்க்கை அம்மன் ஆலயத்துக்கு முன் நேற்று வைபவம்

யாழ்ப்பாணம்,டிசெ.21

யாழ்ப்பாணத்துக்கும் - கருகம்பனைக்கும் இடையிலான 795 ஆம் இலக்க பஸ் சேவை நேற்று முதல் மீண்டும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பான நிகழ்வு ஒன்று நேற்று முற்பகல் 11 மணியளவில் தெல்லிப்பழை துர்க்கை அம்மன் ஆலயத்துக்கு முன்னால் இடம்பெற்றது. வடபிராந்திய போக்குவரத்துச் சபையின் பொது முகாமையாளர் வி.எஸ்.சொக்கலிங்கம் மற்றும் கருகம்பனை கிராம அபிவிருத்திச் சங்க உறுப்பினர்கள் மற்றும் பொது மக்கள் இந்த நிகழ்வில் கலந்து கொண்டனர்.

தினமும் காலை 6.15 மணிக்கு இளவாலையில் இருந்து புறப்படும் இந்த பஸ் துர்க்காபுரம் ஊடாக சுன்னாகம்வரை செல்லும். இதன்மூலம் இளவாலை மற்றும் ஏனைய இடங்களைச் சேர்ந்த விவசாயிகள் தமது விளைபொருள்களை சுன்னாகம் சந்தைக்கு எடுத்துச்செல்ல முடியும்.

பின்னர் காலை 7.30 மணியளவில் சுன்னாகத்தில் இருந்து புறப்படும் இந்த பஸ் மகாஜனக் கல்லூரி மாணவர்களையும் மற்றும் பாடசாலை மாணவர்களையும் பொது மக்களையும் ஏற்றிக்கொண்டு துர்க்காபுரம் ஊடாக இளவாலையைச் சென்றடையும்.

பின்னர் காலை 8.15 மணிக்கு இந்த பஸ் இளவாலையில் இருந்து யாழ்ப்பாணத்துக்கு சேவையை நடத்தும். (இ-7)

# யுத்தத்தை நிறுத்துவதே ஸ்ரீமாவோவுக்கு ஜனாதிபதி செய்யும் ஆத்மசாந்தி ஆகும்

## நாடாளுமன்றத்தில் மகேஸ்வரன் தெரிவிப்பு

கொழும்பு,டிசெ.21

யுத்தத்தை நிறுத்தி தமிழர்களின் பிரச்சினைக்குத் தீர்வு காண முயல்வதே தனது தாயாராகிய பிரதமர் ஸ்ரீமாவோ பண்டாரநாயக்காவுக்கு ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க செய்யும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையாகும்.

இவ்வாறு தெரிவித்தார் ஐ.தே.க எம்.பி தி.மகேஸ்வரன்.

நாடாளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற முன்னாள் பிரதமர் ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கவின் மறைவுக்கு அனுதாபம் தெரிவிக்கும் பிரேரணையில் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

முன்னாள் பிரதமர் ஸ்ரீமாவோ பண்டாரநாயக்க தமிழர்களால் பெரிதும் மதிக்கப்பட்டவர். ஆனால் அவரது மகளான ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்காவை தமிழர்கள் வெறுக்கின்றனர்.

ஸ்ரீமாவோவால் கட்டப்பட்ட வீடுகள் பலவும் இன்று அவரது மகளால் இடித்து தரைமட்டமாக்கப்படுகின்றன. எனவே தமிழர்கள் மீதான அடக்குமுறையை அரசாங்கம் கைவிடவேண்டும். இதன் மூலமாகவே ஸ்ரீமாவோவின் ஆத்மா சாந்தியடையும்.

இப்படி அவர் மேலும் தெரிவித்தார். (இ-7-8)

# அடையாள வேலைநிறுத்தம்

மட்டக்களப்பு,டிசெ.21

மட்டக்களப்பு போதனா வைத்தியசாலை மற்றும் ஏனைய வைத்தியசாலைகளைச் சேர்ந்த டாக்டர்கள் நேற்று ஒருநாள் அடையாள வேலை நிறுத்தப் போராட்டம் ஒன்றை நடத்தினர்.

பாதுகாப்பான போக்குவரத்து வசதி,தங்குமிட வசதி என்பன செய்துதரப்பட வேண்டும் எனவும் ஆஸ்பத்திரிகளில் நிலவும் வெற்றிடங்கள் நிரப்பப்படவேண்டும் எனவும் கோரியே இந்த அடையாள வேலை நிறுத்தப் போராட்டம் நடத்தப்பட்டது.

## வீடு பார்க்க...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ணைக்கு அழைத்துச் சென்றனர் என்றும் -

தங்களது கண்களைக் கட்டி விட்டு தம்மைத் தாக்கியதாகவும்- அந்த இளைஞர் தெரிவித்தார்.

தாம் ஒருவாறு தப்பி வடமராட்சிக்கு வந்து சேர்ந்ததாகவும் -

ஏனையோர் சீருடையினரால் தடுத்து வைக்கப்பட்டதைக் கண்டதாகவும் - அவர் மேலும் சொன்னார்.

ஒரே குடும்பத்தைச் சேர்ந்த வே. கணேசு (வயது 30), அவரது 13 வயது மகன், ரவி (வயது 20), பெரியதம்பி (வயது 23), பாலு (வயது 30), அவரது மகன் பிரபா (வயது 5) ஆகியோரும் மற்றும் இருவருமே வீடு திரும்பாதவர்களாவர். (இ-3-109-117)

# 200 இளைஞர்களுக்கு மலை உச்சியில் பயிற்சி!

## விடுதலைப் புலி உறுப்பினர்களாம்!!

கொழும்பு,டிசெ.21

பதுளை மாவட்டத்தில், பெருந்தோட்டப் பகுதியைச் சேர்ந்த 200 இளைஞர் யுவதிகளுக்கு நமுனுகுல மலை உச்சிப் பகுதிகளில் விடுதலைப் புலிகள் இரகசிய இராணுவப் பயிற்சி வழங்கி வருவது தெரியவந்துள்ளதாக கொழும்பு சிங்களப் பத்திரிகை ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

விடுதலைப் புலிகள் என்ற சந்தேகத்தின் பேரில் பசறைப் பொலீஸாரால் அண்மையில் கைதுசெய்யப்பட்ட யூரி தோட்டத்தைச் சேர்ந்த சந்தேக நபர்களை விசாரித்ததில் இந்தத் தகவல் கசிந்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கொழும்பிலிருந்து பதுளைப் பகுதிக்கு வந்த புலிகள் இயக்கத்தின் முக்கிய தலைவர்கள் இருவர் இயக்கத்துக்கு ஆள்சேர்ப்பதில் தீவிரமாக ஈடுபட்டு வருகின்றனர். இவர்கள் 'எல்லாளன் படை'யைச் சேர்ந்தவர்களாக இருக்க வேண்டும்.

பதுளை மாவட்டத்தில் இவர்களால் சேர்க்கப்பட்ட 200 பேருக்கும் நமுனுகுல மலை உச்சிப் பிரதேசத்தில் தொடர்ந்து எட்டு நாள்கள் பயிற்சி அளிக்கப்பட்டது.

மேற்கண்டவாறு கைதான சந்தேக நபர்கள் பொலீஸாருக்கு அளித்த வாக்குமூலத்தில் தெரிவித்துள்ளனர்- இப்படி அந்தப் பத்திரிகை தெரிவித்துள்ளது (இ-8)

## மோதல்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

டன் விடுதலைப் புலிகளுடன் பேச்சு நடத்த நாம் தயாராக இருக்கிறோம். ஆனால் விடுதலைப்புலிகள் இன்னமும் பேச்சுக்குத் தயாராகவில்லை. அவர்கள் பேச்சு நடத்த விருப்பம் கொண்டிருக்கலாம். ஆனால் எமக்கு அவர்களின் நிபந்தனைகள் எதுவும் தெரியவில்லை.

நிபந்தனை இன்றிப் பேச்சுக்கு வருமாறு அவர்களுக்கு அழைப்பு விடுத்துள்ளோம். அவர்களது புதிய நிபந்தனைகள் குறித்து எமக்கு எதுவும் தெரியாது. எனினும் வடக்கு - கிழக்கில் இருந்து படையினரை நாம் விலக்கப்போவதில்லை.

யுத்தத்தை முடிவுக்குக் கொண்டு வரும் விடயத்துக்கு நாம் முன்னுரிமை கொடுத்துள்ளோம் - என்றார். (இ-3)

## யுத்தத்தை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பிரதிநிதிகள், உலக வங்கிப் பிரதிநிதிகள், இலங்கை அரசுப் பிரதிநிதிகள் ஆகியோர் பங்குபற்றினர்.

இதில் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவும் கலந்து கொள்ள இருந்த போதும், இறுதி நேரத்தில் அவர் அங்கு வரவில்லை.

இலங்கையில் தொடரும் யுத்தத்தை முடிவுக்கு கொண்டு வந்து, நாட்டின் பொருளாதாரத்தை வளர்ப்பதுடன வறுமையை ஒழிக்க உடன் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று உதவி வழங்கும் நாடுகளும், நிறுவனங்களும் இலங்கை அரசாங்கத்தைக் கோரியுள்ளன என்று அந்த மாநாட்டில் விடுக்கப்பட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

யுத்தத்துக்கும் வறுமைக்கும் நெருங்கிய தொடர்பு இருப்பதால் வறுமை ஒழிக்கப்பட யுத்தம் நிறுத்தப்பட வேண்டும் என்று உதவி வழங்கும் நாடுகளின் பிரதிநிதிகள் வலியுறுத்தியதாக அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இத்தகைய கோரிக்கை ஒன்றை உதவி வழங்கும் நாடுகள் மற்றும் நிறுவனங்கள் இலங்கைக்கு விடுத்துள்ளது இதுவே முதல் தடவை என்று அவதானிகள் சுட்டிக்காட்டினர். (இ-3-7)

KANNAN COMPUTER TRAINING CENTRE
O/L பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்களே கணனி கற்க விரும்புகிறீர்களா?
காலை 9.00 மணி
அநேக மாணவர்களின் வேண்டுகோளுக்கிணங்க புதிய பிரிவு ஆரம்பிக்கப்படுகிறது. எனவே இவ்வரிய சந்தர்ப்பத்தை தவறவிடாது இன்றே கணனிப் பயிற்சியைப் பயின்று கொள்ளுங்கள்.
எமது பயிற்சிநெறிகள்
Certificate Courses
3 MONTHS
MS WORD 2000
MS EXCEL 2000
MS POWER POINT 2000
MS ACCESS 2000
MS WORD 2000
MS EXCEL 2000
MS POWER POINT 2000
MS ACCESS 2000
Pascal 7.0
VISUAL BASIC 6.0
AUTO CAD 2000 i
D base III+
C/C++
Windows 98/2000
மிகக்குறைந்த கட்டணத்தில் சிறுவர்களுக்கான கணனிப் பயிற்சிநெறியும் ஆரம்பிக்கப்படுகிறது.
தொடர்புகளுக்கு:
ஆரம்பம்: 23.12.2000
சந்திரன் பான்சி பலஸ், (கண்ணன் கடை), நவாலி வீதி, ஆனைக்கோட்டை.
Kannan Computer Training Centre, Ujarappulam Road, Annaicoddai, T.P.No: 2758
(81812)

ஆரம்பமாகிவிட்டது
A/L 2001
நாடகமும் அரங்கியலும்
Mr.க.ஸ்ரீகந்தவேள்
SAT. SUN.- 9.00 a.m.
BEACON
வெலிங்டன் சந்தியருகில்
(81898)

NEW SCIENCE COLLEGE
பௌதிகவியல்
சடப்பொருளியல்
By M.KARUNANITHY (B.Sc. spl.)
ஆரம்பம்:- 23/12/2000 சனி காலை 7.00 மணி.
(81921)

2001 ஆம் வருட லீலா டயறிகள்
விற்பனையாகின்றன
உதயன் பணிமனை
361, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
(C/14389)

பாரதி வீடியோ & ஓடியோ
கிறிஸ்மஸ் தினத்தை முன்னிட்டு எஸ்தர் பேபி மற்றும் பிரபல இந்தியப் பாடகர்கள் பாடிய கிறிஸ்மஸ் பாடல்கள் ஒலிப்பதிவு செய்த கசெற்றுக்களை குறைந்த கட்டணத்தில் உடன் பெற்றுக்கொள்ளலாம்.
இங்கு
போட்டோ பிரதிகள், லெமினெற்றிங், ஓடியோ, வீடியோ றெக்கோடிங் செய்து கொடுக்கப்படுவதோடு தமிழ், ஆங்கில திரைப்படப் பிரதிகளை வாடகைக்கும் பெற்றுக்கொள்ளலாம்.
பாரதி
கோண்டாவில் சந்தி, ஸ்ரேசன் றோட், கோண்டாவில்.
(C/14394)

கண்ணீர் அஞ்சலி
நீர்வேலி கந்தசுவாமி கோயில்
பிரதம குருக்கள்
சிவஸ்ரீ
சுவாமிநாதர் இராஜேந்திரக்குருக்கள்
அவர்களின் மறைவு சைவ உலகுக்கு ஈடுசெய்ய முடியாத பேரிழப்பாகும். புகழ்பூத்த நீர்வேலியின் புகழில் ஓர் அங்கம் குறைந்துள்ளது. அன்னாரின் மறைவையிட்டு எமது கண்ணீர் அஞ்சலியைக் காணிக்கையாக்குகின்றோம்.
காமாட்சி அம்பாள் கோயில் நிர்வாகிகள்,
காமாட்சி அம்பாள் இந்து பரிபாலன சபை நிர்வாகிகள்,
நீர்வேலி. (C/14395)

வணிகப் பிரமுகர்களே!
மேலும் மேலும் உங்கள் பெயர் விலாசங்களை 2001 ஆம் ஆண்டுக்கான கலண்டர்கள் மூலம் ஊர்ஜிதம் செய்துகொள்ள நூற்றுக்கும் மேற்பட்ட வண்ண வண்ண வடிவக் கலண்டர்களையும், டெஸ்க், மனேஜ்மன்ற் மற்றும் பொக்கற் டயறிகளையும் எம்மிடம் பெற்றுக்கொள்ளலாம்.
கொள்வனவுத் தொகைக்கு ஏற்ப விசேட கழிவு வழங்கப்படும்.
தொடர்புகளுக்கு:
சிவா நறுமணப் பூங்கா
288,ஆஸ்பத்திரி வீதி,
(சத்திரத்துச் சந்திக்கு அருகில்)
யாழ்ப்பாணம். தொலைபேசி: 2567
(81853)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்பிளிகேசன் (பிறைவேற்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 21.12.2000 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.